# சிறீ அளித்த சிறை



நாவேந்தன்

# சிறீ அளித்த சிறை

(ஈழத் தமிழர்தம் முதற் சட்டமறுப்புப் போராட்டம் தொடர்பான நூல்)

எழுதியவர்:
“நாவேந்தன்”

வெளியீடு:
**நிலா பதிப்பகம்,**
70/1, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

## நூல் விவரக் குறிப்பு

நூல் : சிறீ அளித்த சிறை

ஆசிரியர் : நாவேந்தன்

முதற்பதிப்பு : மே, 1959

மீள்பதிப்பு : 10-07-2002



©உரிமை : பதிப்பகத்தாருக்கு



வெளியீடு : நிலா பதிப்பகம்,
70/1, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

விற்பனையாளர் : லங்கா புத்தகசாலை,
F.L - 1-14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு - 12.
Tel : 341942.

வெளிநாடுகளில்: CDC EUROPE ORIENT,
5, RUE DENFERTR OCHEREAU,
31000 TOULOUSE,
FRANCE.
Tel : 0561550013
Tel & Fax : 0561634969

அச்சிட்டோர் : பேர்பெக்ற் பிறின்ரேர்ஸ்,
130, டயஸ் பிளேஸ்,
கொழும்பு - 12.

விலை : இலங்கையில் : 75/-
வெளிநாடுகளில் : US $ 3


## காணிக்கை

தமிழினத்தின் விடுதலைப் போரில் உடல், பொருள், ஆவி அனைத்தையுந் தியாகக் காணிக்கையாக்கிய - காணிக்கையாக்கக் காத்திருக்கின்ற மாவீரம் படைத்த மறத்தமிழ்ப் பெருவீரர் படையணிக்கு இச்சிறுநூலை அன்புக் காணிக்கையாக்குகின்றேன்.

- "நாவேந்தன்"



கவிதையா, நாடகமா, கண்டனத்து நெருப்பா
கண்ணீரை வரவழைக்கும் மடலா? எல்லாம்
குவிந்திருக்கும் பெருங்கடல் நீ ! உன் எழுத்தால்
குனிந்திருந்த தமிழ் கொஞ்சம் நிமிர்ந்ததிங்கே!
புவிமணலில் வளமிறைக்கும் அலைகள் போலப்
புதிய வளம் அளிப்பவன் நீ! உன்றன் நாக்கு
குவிகின்ற போதெல்லாம் செந்தமிழ்த் தாய்
குளிப்பதற்குப் பன்னீரைக் கொட்டி நின்றாய்!

தமிழரசுத் தலைவரும், கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான

## திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் அளித்த

# வாழ்த்துரை



நண்பர் நாவேந்தன் (திருநாவுக்கரசு) அவர்கள் எழுதிய 'சிறீ அளித்த சிறை' என்னும் நூலை வாசித்தேன். இந்நூல் ஆசிரியரின் சிறை அனுபவங்களை, சிறைவாசத்தில் எழுந்த உணர்ச்சி அலைகளை எல்லாம் படம் பிடித்துக் காட்டுகிறது.

இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தில், தனிச் சிங்களக் கொள்கையைத் - தமிழ்ப் பேசும் மக்கள் மீது சிங்களத் திணிப்பு ஏற்படுவதைத் தடுத்து நிறுத்த நடத்தப்படும் முயற்சிகள் அனைத்தும் முக்கிய இடம்பெறும் என்பதில் ஐயமில்லை. சிங்களத் திணிப்பை எதிர்க்கும் நடவடிக்கைகளும் விடுதலைப் போராட்டமும் தொடர்ந்து தீவிரமாக நடக்க வேண்டியது அவசியம். இப்போராட்டத்துக்கு ஊக்கமளிக்கும் வகையில், உணர்ச்சியைத் தூண்டும் முறையில் அமைந்துள்ளது இச்சிறுநூல். தமிழ்ப் பேசும் மக்களனைவரும் இந்நூலை வாசித்து, தமிழ்த் தொண்டிலும் விடுதலைப் போரிலும் மேலும் தீவிரமாக ஈடுபடுவார்களாக.

வாழ்க தமிழ் மொழி!
வாழ்க தமிழ் பேசும் மக்கள்!!
வாழ்க தமிழரசு!!!

**47, கண்டி வீதி, கு. வன்னியசிங்கம் எம். பி.**
**யாழ்ப்பாணம். 12.05.1959.**

# நான் கண்ட நாவேந்தன்



நாட்டின் விடுதலைக்காக, இனத்தின் உரிமைக்காகத் தங்கள் சுதந்திரத்தைச் சில காலத்துக்கோ, வாழ்நாள் முழுவதுமோ இழக்கச் சித்தமான எண்ணற்ற வீரர்களைப் பற்றிப் பெருமை கொள்ளாத சமுதாயமே நாகரிக உலகில் இல்லை எனலாம். ஈழத்தமிழ் இனத்தை மாத்திரமல்ல இலங்கை மக்கள் அத்தனை பேரையும் பொறுத்தவரையில் இந்த அனுபவம் ஓரளவு புதிது என்று சொல்லலாம். எவ்வித தியாகமும் இன்றி இந்திய சுதந்திரத்தின் உப பொருளாக இலங்கையும் சுதந்திரமடைந்தது. இந்தச் சுதந்திரம் தமிழ் மக்களுக்கு இன்னும் மோசமான அடிமை நிலையை ஏற்படுத்தியது. உணர்ச்சி கொண்ட தமிழருக்கு இது ஒரு அறைகூவலாக அமைந்தது. நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெருமக்களும் வாலிபர்களும் அவ்வறைகூவலை ஏற்று உரிமைப் போரில் குதித்திருக்கின்றனர். அப்போரின் ஒரு அங்கமாகிய சிங்கள மொழிச் சட்டத்தை எதிர்த்து நடந்த கிளர்ச்சி அளித்த பரிசையே நண்பர் நாவேந்தன் இக்கட்டுரையில் வர்ணிக்கிறார்.

பள்ளி மாணவனாகப் பத்து ஆண்டுகளுக்கு முன்பே, தமிழரசுக் கட்சியின் ஆரம்பக் காலத்திலேயே அந்த இயக்கத்தில் ஈடுபட்ட வாலிபர்களில் நண்பர் நாவேந்தனும் ஒருவர். நானும் ஒரு மாணவனாக இருந்த நேரத்தில் கொட்டும் மழையில் வேலணையில் கட்சிப்



பிரசாரக் கூட்டம் ஒன்றிற்கு நாங்கள் இருவரும் மற்றும் நண்பர்களுடன் சென்று திரும்பி வந்தபோது மோட்டார் விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நாவேந்தனின் அன்றைய கோலம் இன்றும் என் கண்முன் தோன்றுகிறது.

1954ஆம் ஆண்டு மகாராணி முன்னிலையில் தமிழை அவமதித்துவிட்டுத் தமிழ்நாட்டில் பவனி வந்தார் சேர். ஜோன் கொத்தலாவலை. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் திரண்டிருந்த வரவேற்பு வைபவத்தில் சுமார் 300 வாலிபர்களைக் கொண்ட ஓர் கூட்டம் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தியது. பொலிசா ரின் குண்டாந்தடித் தாக்குதலுக்கு ஆளாகிச் செங்குருதி சிந்தினார்கள் எத்தனையோ வாலிபர்கள். அச்சிறு கூட்டத்தில் எங்களுடன் செந்தமிழுக்காக இரத்ததானம் செய்த தோழர் நாவேந்தன் நான்கு ஆண்டுகளின் பின் தமிழுக்காகச் சிறையும் சென்றார் என்றால் எவரும் ஆச்சரியப்பட முடியாது. இளமையிலிருந்தே கொள்கையிற் தோய்ந்து, உரம்பெற்ற அவர் உள்ளம் இச்சிறை அனுபவத்தினால் மேலும் வைரம் பெற்றிருப்பதை இச்சிறு நூலில் காணலாம். அவர் வழிச் செல்ல ஆயிரம், ஆயிரம் வீரர்களைத் தமிழன்னை பெற்றெடுப்பாள் என்றே நம்புகிறேன்.

வாழ்க தமிழ்!
வெல்க தமிழரசு!!

**அ. அமிர்தலிங்கம், எம். பி.**

**யாழ்ப்பாணம்.**
**15.05.1959.**

# பேனா பேசுகிறது!

'சிறீ அளித்த சிறை' ஏழு நாட்கள் தாம்! ஆனால் அந்த ஏழு நாட்களிலும் யான் பெற்ற அனுபவம், எண்ணங்கள் என்றுமே என் நெஞ்சை விட்டகலாதவை. இலங்கையில் தமிழர் தம் அரசியல் நடவடிக்கைகளைப் பொறுத்தவரை இத்தகைய ஒரு நூல் வெளிவருவது இதுவே முதன்முறை. அதுவும் என்னாலேயே எழுதப்படுகிறதென்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி எனக்கு! இலங்கையின் வரலாற்றிலேயே அதிபயங்கரமான இருண்ட காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் கிளர்ச்சியையே 'சவ அமைதி' பெற்று விடச் செய்த அட்டூழியங்கள் கோரத்தாண்டவமாடிய கொடிய கால கட்டத்தில் நான் சிறைக்குள்ளிருந்தேன். அந்தச் சிறை அனுபவமே என்னை இந்நூலை எழுதச் செய்தது. இதனை யான் எழுதிப் பல மாதங்கள் கடந்து விட்டன. அவசரகால நிலை அமுலிலிருந்த போது இதனை அச்சிட்டு வெளியிட முடியாதிருந்தது. அதன் பின்னரும் பிரசுரமாக்கும் பெரும் பணியைத் தடை செய்யப் பல காரணங்கள் முன்னின்றன.



இப்பொழுது அந்தத் தடைகளையெல்லாம் தள்ளிவிட்டு நூலுருப் பெற்று விட்டது 'சிறீ அளித்த சிறை'.

காலவரையறையுடன் கூடிய தமிழரசுப் போராட்டச் சரித்திரமோ, சிறீ எதிர்ப்புப் போராட்டத்தில் கட்சியின் நடவடிக்கைகள் பற்றிய முழு விபரங்களோ அல்லது அப்போராட்டத்தின் விளைவுகளைப் பற்றிய தீர்க்க தரிசனமோ பூரணமான முறையில் இந்நூலில் இடம் பெறவில்லை. அங்ஙனமெழுதுதற்கு யான் தகுதியுடையவனுமல்லன். ஆனால் சிங்கள சிறீ எதிர்ப்பு இயக்கத்தில் தன்மானமுள்ள தமிழ் மகன் ஒவ்வொருவனும் ஏன் ஈடுபட்டானென்பதையும் அதற்கான காரணங்களையும் எனது சிறை அனுபவத்துடன் தொடர்புபடுத்தி ரசமாகச் சொல்ல முயன்றிருக்கிறேன். எனவே இதனில் தவறுகள் காண்போர் மன்னிக்க வேண்டும் என்னை. சிறை அனுபவத்தைக் கூட முற்று முழுதாக இதில் எழுதிவிட முடியாது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் முன்னேற்றத்திற்கும் அவர்களிற் சிலர் என்னிற் காட்டிய அன்புக்கும் அஃதொரு தடையாகக் கூடுமென்ற காரணத்தால். சிறை அனுபவத்தின் மறைக்கப்பட்ட பகுதியை அறிய ஆசைப்படும் அன்பர்கள் என்றைக்காவது என்னால் எழுதப்படும் நாவலையோ, சிறுகதைகளையோ, துப்பறியும் கதைகளையோ வாசிக்கக் காத்திருக்கும் பொறுமையுடையவர்களாகுக. இந்நூல் வெளிவரக் காரணமாயமைந்தவர்களுக்கு என் நன்றி உரியதாகும். வாழ்த்துரை எழுதியுதவிய

கோப்பாய்த் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர், தமிழரசுத் தலைவர் திரு. கு. வன்னியசிங்கம் அவர்களுக்கும், 'என்னைப்பற்றி' எழுதியுள்ள வட்டுக்கோட்டைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர், எனது மதிப்புக்குரிய நண்பர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அச்சு வேலைகளனைத்தையும் உடனிருந்தே கவனித்து உரியகாலத்தில் நூலுருவில் வெளிக்கொணர்ந்த எனதருமைச் சகோதரர் திரு. த. துரைசிங்கம் அவர்களுக்கும், நூலை நல்ல முறையில் அச்சிட்டுதவிய ஸ்ரீ சண்முகநாத அச்சக அதிபர் திரு. ச. குமாரசாமி அவர்கட்கும் என் அன்பும், நன்றியுமுரியது. ஒரு அரசியல், இலட்சிய நூலை அறிமுகமாக்கிக் கொள்வதில் இவ்வளவு பொறுமை காட்டிய வாசக நேயர்கட்கும் என் நன்றி.

வெல்க தமிழரசு! வாழ்க தமிழனம்!
வணக்கம்.

**தமிழ் மன்றம்,**
**மானிப்பாய்.**
**15.5.59**

**அன்பன்**
**நாவேந்தன்**



# பதிப்புரை

'நற்றமிழுக்கு ஒரு நாவேந்தன்' எனப் புகழப் பெற்றவர் அமரத்துவமடைந்த திரு. நாவேந்தன் அவர்கள். ஈழத்து அரசியல், இலக்கிய வானில் கடந்த ஐந்து தசாப்தங்களுக்கு மேலாகச் சுடர் விட்டுப் பிரகாசித்த பெருமைக்குரியவர். சிறுகதை, கவிதை, நாடகம், நாவல், கட்டுரை, விமர்சனம் ஆகிய பல்வேறு துறைகளில் அவர் எழுதிக் குவித்தவை ஏராளம். அவற்றுள் சில நூலுருப் பெற்றுள்ளன. பல நூலுருப் பெறக் காத்திருக்கின்றன.

அரசியலரங்கில் சொல்வதைச் செயலில் காட்டும் திறன் படைத்தோர் ஒரு சிலரையே நாம் கண்டுள்ளோம். அத்தகையோரில் நாவேந்தனும் ஒருவர். தமிழரசுக்கட்சி சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தபோது அதில் துணிவுடன் குதித்தோரில் நாவேந்தனும் ஒருவர். ஈழத்தில் முதன் முதலாக இடம் பெற்ற சட்டமறுப்புப் போராட்டம் அது. இப்போராட்டத்தில் பங்குகொண்டு சிறைபுகுந்த நாவேந்தன், சிறையில் தாம் பெற்ற அனுபவங்களை அழகு தமிழில் 'சிறீ அளித்த சிறை' என்னும் நூலாக வெளியிட்டார். மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் டாக்டர் எச்.பி. செல்லையா தலைமையில் நிகழ்ந்த பெருவிழாவில் தமிழரசுத் தலைவர் (அமரர்) திரு. கு. வன்னியசிங்கம் அவர்களால் இந்நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. வெளியிடப்பட்ட ஆண்டிலேயே இந்நூல் பிரதிகள் அனைத்துமே விற்பனையாகிவிட்டன. தொடர்ந்து வந்த அரசியல் சூழ்நிலைகளால் இதனை மீள் பதிப்புச்செய்ய

எடுக்கப்பட்ட முயற்சிகள் பயன்தரவில்லை.

இன்றைய இளஞ்சந்ததியினர் ஈழத் தமிழர் தம் முதற் சட்டமறுப்புப் போராட்டம் குறித்த இந்நூலை அவசியம் படிக்க வேண்டும். எனவே இந்நூலை மீள்பதிப்புச் செய்யுங்கள் என்று புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் பலர் தொடர்ந்து எம்மை வலியுறுத்தி வந்தனர். அவர்களது வேண்டு கோளுக்கமைய 43 ஆண்டுகளின் பின்னர் 'சிறீ அளித்த சிறை' மறுபதிப்புக் காண்கிறது. ஈழத்தமிழர் தம் விடுதலைப்போராட்டம் உலகளாவிய வகையில் பலம் பெற்றுள்ள இவ்வேளையில் இந்நூலை மீள்பதிப்புச் செய்வதில் மிக்க மகிழ்வுறுகிறோம். நூலாசிரியர் அமரத்துவமடைந்த ஈராண்டு நிறைவின் போது இந்நூல் மீண்டும் வெளியாகிறது. விடுதலை விரும்பிகள் அனை வரும் இந்நூலை விரும்பிக் கற்பரென எதிர்பார்க் கிறோம். இந்நூலின் பிரதியை மீள்பதிப்புச் செய்யத் தந்துதவிய டாக்டர். வி. ரி. இளங்கோவன் அவர் களுக்கு எம் நன்றி. ஈழத்தமிழினத்தின் விடுதலைக்கு இதன் மூலம் சிறிதளவேனும் பயன்கிட்டுமாயின் அதுவே நாம் பெறும் பெரும் பேறாகும்.

நன்றி.

- **பதிப்பகத்தார்.**



# சிறீ அளித்த சிறை

நீலவானம். நீளக் கிடக்கும் கடல், சுற்றிச் சுழன்று வீசும் வலிய காற்று, விரிந்து பரந்து பச்சைப் பசேலென்று காட்சி தரும் வயல் நிலங்கள், தோட்டங்கள், அவற்றின் மத்தியில் மென்னடை பயின்ற வண்ணம் சுறுசுறுப்புடன் வேலை செய்யும் ஆடவர், பெண்டிர், அழகு மங்கையர், ஆகாயத்தில் வட்டமிட்டுப் பறந்து செல்லும் பறவைகள், குயிலின் இனிமையான குரல், கிளிகளின் அகவல்கள் ஆ! எவ்வளவு மனோகரமான காட்சி. உள்ளத்தில் எல்லையில்லா உவகை பெருக்கெடுத்தது. மனக்கடலின் எண்ண அலைகள் கற்பனை வானை முட்டி மோதிப் புரண்டு கொண்டிருந்தன. சுற்றுப்புறத்தின் போதைக் கவர்ச்சியிலே என்னை மறந்து கவிஞர்களின் 'நெட்டைக் கனவு' தனில் மூழ்கிக் கிடந்த என்னை - எங்களைச் சுமந்து சென்று கொண்டிருந்த மோட்டார் வண்டியின் அசுரவேகம் ஒரு 'தட்டுத்தட்டி' விழித்தெழச் செய்தது. இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. ஒரு மூலையிலிருந்து ஒரு பூதாகார மான கேள்வி - 'நான் எங்கே செல்கிறேன்?' என எதிரொலித்தது.

நான் எங்கே செல்கிறேன்? அழகான பூஞ்சோலை. சுகந்த மணத்தென்றல் பவனிவரும் சொர்க்கபூமி, குயில் பாட, மயிலாட, கோலக் கிளி பேச, அயில் போலும் விழியுடைய அரிவையர், விளையாட்டயரும் ஆடரங்கு அத்தனையுமுடைய இன்ப பூமிக்கா சென்று கொண்டிருக் கிறேன்? இல்லையே. இல்லையென்றால்.... இதயத்து விளிம்பைக் கடந்து, உதடுகளின் உராய்வை உண்டாக்கி மெல்லொலி செய்த அந்த அர்த்தம் நிறைந்த இரு வரிகளையும் திருப்பித் திருப்பிச் சொல்லிப் பார்த்தேன்.

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை.
எமை மாட்ட நினைத்திடுஞ் சிறைச்சாலை.'

ஆம். சிறையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேன். சிங்கள வகுப்புவாத அரசாங்கத்தின் அடக்குமுறையை எதிர்த்து - தனித் தமிழ் நாட்டிலே சிங்களத்தை, சிங்கள 'சிறீ' யை, சட்டபூர்வமாக, பகிரங்கமாக பஸ் வண்டிகளில் பொறித்து அனுப்புவதன் மூலம் - தமிழர்களின் - தமிழ்ப் பேசும் மக்களின் தன்மானத்தைக், களங்கமடையாத வீரத்தை, கன்னித் தமிழுணர்ச்சியைத், தாய் மொழிப் பற்றை அவமானப்படுத்திய அரசாங்கத்தின் கொட்டத்தை அடக்க, கொடுமையை ஒழிக்க, அநியாயத்தை அழிக்கச் 'சிங்கள சிறீ'யை அழித்து 'பஸ்' ஸிலே தமிழ் சிறீயை எழுதிய குற்றத்திற்காக, அன்னைத் தமிழின் வலிமை அழியாதது என்பதை எடுத்துக் காட்டியதற்காகத்தான் சிறைக்குச் செல்கிறேன். ஒரு வாரச் சிறைத்தண்டனை. ஏழு நாட்கள் சிறையிலே





எங்களை அடைத்து விட்டால் செந்தமிழ் வீரம் செத்து விடாது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் சிறையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேன். தனியாக அல்ல: தமிழுணர்ச்சி படைத்த, தலையைக் கொடுத்தும் தமிழைக் காப்போம் என்ற தன்மான உணர்ச்சி நிறைந்த பதினொரு மாவீரர்களுடன்.

* * *

1958 - ஏப்ரல் 14ந் தேதி. இந்துக்களின் புனிதமான புதுவருடதினம். அத்திருநாளிலே தான் சிங்கள வகுப்புவாத அரசாங்கத்தின் முதலமைச்சரும், போக்குவரத்து அமைச்ச ரும், பிற பெருந்தலைகளும், என்ன செய்யக்கூடாது என்று தமிழர்களை மிரட்டினார் களோ, செய்தால் பாரதூரமான நடவடிக்கைகளுக் காளாவீர்கள் எனப் பயமுறுத்தினார்களோ - அத்தகைய செய்யக் கூடாத செயலை, பாரதூரமான நடவடிக்கை களை மேற்கொள்ளத் தூண்டும் 'பயங்கரமான' செய லைக் கொஞ்சமும் நெஞ்சமஞ்சாமல் பகிரங்கமாகச் செய்தோம் பருத்தித்துறையிலே.

தலைவர் வன்னியசிங்கம் அவர்களின் தலைமை யிலே இ.போ.ச. பஸ்ஸிலே உள்ள சிங்கள சிறீயை அழித்துத் தமிழ்ச் சிறீயை எழுதினோம். நானும் - நண்பர் புதுமைலோலனும். உடனே கைது செய்தார்கள். பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். ஏப்ரல் 22ந் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு வரவேண்டுமெனக் கூறி விடுதலை செய்தார்கள்.

ஏப்ரல் 22ந் தேதி. பருத்தித்துறை நீதிமன்றத்திலே

எங்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. எதற்காகச் சிங்கள சிறீயை அழித்துத் தமிழ்ச் சிறீயை எழுதினோம் என்பது பற்றி நானும், நண்பர் புதுமைலோலனும் பேசினோம். இல்லை - தமிழினத்தின் விடுதலை வேட்கையைச் சொல்லிலே வடித்துத் துடிப்பான பேச்சின் மூலம் எடுத்துக் காட்டினோம். நான் பேசினேன்.

கனம் நீதிபதி அவர்களே,

சிங்கள சிறீயை அழித்ததாகவும், அதன் மூலம் சில நட்டங்களை அரசாங்கத்திற்கு விளைத்ததாகவும், என்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் 'இக்குற்றங்களை' நான் ஏன் செய்யவேண்டி நேர்ந்த தென்பதை உங்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டும். இலங்கை வளநாட்டிலே வதியும் தமிழ்ப் பேசும் இனம் இன்று இன்னல்கள் பலவற்றுக்காளாகி வாழ்வதா அன்றி மாழ்வதா என்ற இக்கட்டான நிலையிலே உள்ளது. இலங்கை சுதந்திரம் பெற்றுள்ள ஒரு சனநாயக ஆட்சிமுறை நாடு என்றுசொல்லப்படுகிறது. இலங்கை யின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களில் தமிழ்த் தலைவர்கள் முக்கியமான பங்கினை நிறைவேற்றியுள்ளனர். இந்த நாட்டின் வளர்ச்சி, அபிவிருத்தி, அரசியல் முன்னேற்றம் அனைத்துக்கும் தமிழர் செய்த சேவை மகத்தானது. எனவே சுதந்திரமடைந்த இலங்கையில் தமிழ்ப் பேசும் இனம் சுதந்திரமாக வாழும் உரிமையுடையது. இயல்பாகவே அமைந்துள்ள இந்த உரிமையை இன்றைய சிங்கள ஏகாதிபத்தியம் மறுக்கிறது. தமிழ்ப் பேசும் இனத்தைத் திட்டமிட்டு அழித்து ஒழித்துவிட ஆசைப்படுகிறது, அதற்கான அலுவல்களில் அதிதீவிரமாக ஈடுபடுகிறது.





இத்தகைய இழிநிலையை எந்தச் சுயமரியாதையுள்ள தமிழ்ப் பேசும் மகனும் பார்த்திருக்க முடியாது. சிங்களம் மட்டும் சட்டமோ, வகுப்பு, இன, மொழி வெறிபிடித்த பண்டாரநாயக்கா அரசாங்கமோ தமிழ்ப் பேசும் இனத்தின் விடுதலை வேட்கையைத் தடுத்திட முடியாது.

சிங்கள சிறீயைத் தமிழ்ப் பேசும் மக்கள் பிரயாணம் செய்யக்கூடிய பஸ்வண்டிகளிலே பொறித்து அனுப்பு வதன் மூலம் தமிழ்ப் பேசும் இனத்தின் தன்மான உணர்ச் சியை, சுய மரியாதையை அரசாங்கம் பகிரங்கமாகவே அவமானப்படுத்தி விட்டது. இந்த அவமானத்தை உடனடியாக ஒழிக்க வேண்டியது தமிழ் மகனாகிய எனது தலையாய கடமை. அதன் காரணமாகவே சிங்கள சிறீயை அழித்து செந்தமிழிலே சிறீயைப் பொறித்தேன். இந்த நாட்டின் சுதந்திரம் சிங்களவர்களின் தனிப்பட்ட சொத்தல்ல. தமிழர்களுடையதுமாகும். சிங்களர் சொர்க்கத்திலிருந்து கொண்டு வந்ததல்ல இலங்கை பெற்ற சுதந்திரம். தமிழ்த் தலைவர்கள் முக்கிய பங்கேற்றுத் தேடிக் கொடுத்த திரவியம் அது. உரிமை பாராட்ட உரிமையுடையவர்கள் நாம்: எமது வீட்டிலே எம்மை எவனும் அவமதிக்க அனுமதியோம். இன்றைய அநியாய ஆட்சிபீடத்தின் சட்டம் என்னைக் 'குற்றவாளி' யாக்கலாம். ஆனால் **இந்தச் சட்டம் என்றோ மாறப் போகிற ஒன்று. மக்களின் நல்வாழ் வுக்காகச் சட்டமே ஒழியச் சட்டத்திற்காக மக்களல்ல.**

கனம் நீதிபதி அவர்களே,

என்மேற் கூறப்பட்டுள்ள 'குற்றங்களை' - அவற்றை யான் செய்ய வேண்டி நேரிட்ட கட்டத்தை விரிவாக

விளக்கியுள்ளேன். முடிவு தருவது உங்கள் கடமை. என்ன முடிவானாலும் தமிழின் பெயரால்.... என் தாய்த் திருநாட்டின் பெயரால் ஏற்றுக் கொள்வேன். ஆம். ஏற்றுக்கொள்ளத்தான் போகிறேன்.

வாழ்க தமிழரசு. வணக்கம்..

இடையே மூன்று தடவைகள் வழக்கு தவணையிடப்பட்டது.

ஜுன் 25ந் தேதி. புதன்கிழமை -

வழக்கின் முடிவு அறிவிக்கப்பட்டது. 20 ரூபா அபராதம் அல்லது ஒரு வாரம் - சரியாக ஏழு நாட்கள் சிறைத் தண்டனை. குற்றப்பணம் கட்ட மறுத்தோம். சிறைத் தண்டனை உறுதிப்படுத்தப்பட்டது; கட்சிக் கொள்கையின் மேல் எங்கட்குள்ள உறுதியைப் போல. சிந்தை நிறைந்த மகிழ்ச்சியுடன் சிறை செல்லத் தயாராகிவிட்டோம். இதோ, அசுரவேகத்தில் 'தலை தெறிக்க' ஓடிக்கொண்டிருக்கிறதே இந்த மோட்டார் வண்டி, எங்கு செல்கின்றதென நினைக்கிறீர்கள். பருத்தித்துறையிலிருந்து - யாழ்ப்பாணம் கோட்டைச் சிறைச்சாலையை நோக்கி வாயு வேகத்தில் வண்டி பறந்து கொண்டிருந்தது. என் சிந்தனைத் திரையில் பலவித தோற்றங்கள் தோன்றி மறையத் தொடங்கின. என்னைச் சுற்றிலும் சிறீயை அழித்துச் சிறையை நிறைக்கத் தயாராகிவிட்ட பதினொரு கர்ம வீரர்களும் புன்னகை தவழும் வதனங்களுடன், சிறைச்சாலை செல்கிறோமே என்ற சிந்தனையேயில்லாதவர்களாக, மனங்கவர்ந்த மங்கையொருத்தியை, மாலைப்பொழுதில் மலர்ச்சோலை யொன்றில் காணச்செல்கின்ற





காதலனைப் போலக் கம்பீரமாக வீற்றிருந்தனர். ஆனால் என் சிந்தனைக் குதிரை எங்கெல்லாமோ சுற்றிச் சுழன்று திரிந்தது.

* * *

பருத்தித்துறை நீதிமன்றத்திலே தீர்ப்புக் கூறப்பட்டது. சிறைக் கைதிகளாகிவிட்டோம். கைதிகளைக் 'காராக்கிருகத்துக்கு' அழைத்துச் செல்லுந் தனையும் அடைத்து வைத்திருப்பார்களே ஒரு அறை. அது தான் 'லாக் அப் றூம்' என அழைக்கப்படுகிறது. எங்கள் மீதுள்ள நம்பிக்கையால், எங்களை 'அழைத்துச் செல்ல வந்திருந்த சிறைச்சாலைக் காவலர் 'லாக் அப்' அறையைப் பூட்டவே இல்லை. நண்பர் புதுமை லோலன் நிம்மதியாகக் கால்களை நீட்டிப் படுத்துக் கொண்டார், அந்தப் 'பள்ளி'யறையில். நான் அவர் பக்கத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். மற்றத் தோழர்களும் சுவாரஸ்யமாக எதையெல்லாமோ பேசிக் கொண்டிருந்தனர். இருந்தாற்போலிருந்து ஒருவித பரபரப்பு. சிறைக் காவலர் எங்களை வெளியே அழைத்தார். 'வண்டி வந்து விட்டது வாருங்கள் போவோம்.' என்றார்.

எங்களைப் பார்த்துச் சொன்னார். 'உங்களை நம்பித் தான் - மற்றைய (அரசியல் அல்லாத) குற்றவாளிகளிருந் தும் கூட நான் 'லாக் அப்'பைத் தீவிரமாக்கவில்லை. அவர்களைக் கொண்டு வருவது உங்கள் பொறுப்பு.'

நான் சிரித்துக் கொண்டே கூறினேன். ''ஆம். அது எங்கள் பொறுப்புத்தான். இப்படியே படிப்படியாக

அரசாங்கத்தையுமே எங்கள் கையில்... எங்கள் கட்சி யின் பொறுப்பில் ஒப்படைத்து விடுங்கள்." எல்லோருஞ் சேர்ந்து சிரித்தனர். வெடிச் சிரிப்புச் சிரித்தனர். அந்தச் சிரிப்பின் ஒலியைக் கேட்கும் வாய்ப்பு இருந்தாலே போதும், பண்டாரநாயக்கா பதறாமலிருக்க முடியாது. வண்டியில் ஏறிவிட்டோம். அது தன்பாட்டில் போய்க் கொண்டிருக்கிறது. பலமைல் தூரம் பறக்கிறது. சிந்தனை சுழல்கிறது. சிறைக்குள் நுழைந்து விட்டால்....

சிறைச்சாலை...?என்ன விசித்திரமான இடம். அதை நினைக்கவே இனந் தெரியாத பலவித உணர்ச்சிப் பொறிகள் உள்ளக்கூடத்தில் மின்னிப் பறந்தன.

* * *

அரசியலில் ஈடுபட்டவர்களுக்குச் சிறைச்சாலை அறிமுகமாகாத தொன்றல்ல. உலகப் பெருந் தலைவர் களாக விளங்கும் அத்தனை அரசியல்வாதிகளும் ஒரு முறையாவது சிறைக்கூடத்தை எட்டிப் பாராமலிருந்த தில்லை. ஆனால் என்னைப் போன்ற சாதாரண மனிதன் ஒருவனுக்கு, அன்றாடச் சோற்றுக்கே ஆசிரியனாக வேலை பார்ப்பவனுக்கு அரசியலும், சிறையும் ஏதோ ஏற்றந்தருமொன்றல்ல. வழக்கறிஞர்கள், டாக்டர்கள், பிரபல வர்த்தகர்கள், நிலச்சுவான்தார்கள், பணமுடைகள் அரசியலிலே ஈடுபட்டால் அது அவர்களை அதிகமாகப் பாதிப்பதில்லை. அவர்கள் மனைவிமார் மாதர் சங்கங்களுக்கு, 'நைட் கிளப்' புக்களுக்குச் செல்வதுபோல அவர்களும் பொதுக் கூட்டங்களுக்குப் போகிறார்கள். பேசுகிறார்கள்.





அவர்களில் பலருக்கு அரசியல் ஒரு அழகுச் சாதனம். மதிப்பும் கண்ணியமும் தரும் குறுக்கு வழி. 'தியாகம்' என்பது அவர்களுக்குப் புரியாத புதிர். பொது மக்களைப் 'பகடைக் காய்களாக' எண்ணி ஆட்டிப் படைக்கும் அதிகாரம் எப்படியோ அவர்கள் கைக்குப் போய்விடுகிறது. ஆனால் மக்கள் நலனை மனதில் கொண்டு அரசியலில் இடம்பெற விரும்பும் ஏழைகளுக்கு, என் போன்றவர்களுக்கு அரசியல் பயங்கரப் பாதை, மேடும் பள்ளமும், காடுங் கடுவிடமும் நிறைந்த கொடு வழி. - ஆனாலுஞ் சிந்திக்குந் திறனை, படைத்தவன் தந்துவிட்ட 'தவறி'னால் அந்தப் பயங்கரப் பாதையில் எப்படியோ இடம் பிடித்து விட்டேன். பயன்...? பயமுறுத் தல்கள், கேலிப் பேச்சுக்கள், கிண்டல் மொழிகள்.... எது வந்தாலும் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும்.

'வாழத்தெரியாதவன்.' - 'வாழ்த்தினர்' சிலர்.

'அறியாத்தனத்துக்கு அரசியல் ஒரு கேடா? அர்ச்சித்தனர் சிலர்.

'உள்ளதும் போய்விட்டால் உலகம் என்ன சொல்லும்.' - அனுதாபப்பட்டனர் சிலர்.

'நாங்கள் என்ன செய்வது? உனக்கு நல்லாக வாழத் தெரியாதா?' - அன்பு கொண்டவர்களின் அங்கலாய்ப்பு.

சரியானதைச் செய்வது சரிதான். ஆனால் வாழவுந் தெரிய வேண்டும்.' - சந்தர்ப்பத்திற்கேற்பச் சரிந்து கொடுத்தனர் சிலர். இத்தனையுந் தாங்கிக்கொண்டுதான் நான் அரசியல் வாழ்வில் வாழ முடிகிறது.

சிங்கள சிறீ அழிப்புப் போராட்டத்தின் போதும் மேற்கண்ட அத்தனை வாழ்த்துக்களும் வந்துதான் போயின. 'தொழிலே தொலைந்து விடும், ஒன்றுக்கும் உதவாதவனாகி விடுவாய். உன்னுடைய எழுத்தை நம்பித்தான் தமிழிலக்கியம் வாழ்கிறதா? எழுதிவிட்டால் மாத்திரம் வாழமுடியாது. தமிழ்ச் சமுதாயத்தில் எழுதி வாழ்ந்தவர்கள் எத்தனை பேர்? 'புதுமைப்பித்தன்' சங்கதி உனக்குத் தெரியாதா?' - நண்பர்கள், உறவினர்கள், அன்பு கொண்ட வர்கள் அத்தனை பேரும் இப்படித்தான் உபதேசித்தனர். பெற்ற அன்னை கண்ணீர் விட்டார். 'சிங்கள சிறீ அழித்துத் தமிழன்னைக்கு வாழ்வு தரக் கூடாது என்பதற்காக அல்ல.' சிறை சென்று விட்டால் பெற்ற வயிறு பற்றி எரியுமே. துன்பம் - என்ன என்பதையே இத்தனை நாளாகத் தெரியாத பிள்ளையாக உன்னை வளர்த்துவிட்டேனே. துடுக்குத்தனங் கொண்டு நடந்து தவறுகள் பல செய்த போதும் தூக்கி வளர்த்த நான் எப்படித் தாங்குவேன்; இந்த வேதனையை. நினைத்து, நினைத்து உண்ணாமல், உறங்காமல் உயிரை விடவா சொல்கிறாய்...?' அன்னையின் கண்ணீர் என் இதயத்தை நனைத்தது. கல்நெஞ்சம் கரையத் தொடங்கியது ஒரு கணம். அடுத்து.

'தமிழைப் பழித்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்' - புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் குமுறும் தமிழாவேசப் பாடல் உள்ளத்தை உலுக்கியது.

'அப்படியொன்றும் நேர்ந்துவிடாதம்மா. நீங்கள் அஞ்ச வேண்டாம்.' பெற்றெடுத்த அன்னையின் முன்னே, மனதறிந்து ஒரு பொய் - பேச நேர்ந்தது - பேசியும் விட்டேன். அத்துடன் அவர் ஆறுதல் பெற்றாரோ,





இல்லையோ நான் பணிபுரியுமிடத்துக்கு வந்துவிட்டேன்.

* * *

இப்பொழுது. சிறை நோக்கிச் செல்கிறேன். அருமை அன்னை. அணைத்து வளர்த்த தந்தை, உயிருக்குயிரான சகோதர சகோதரியர் ஒருவர்க்குமே தெரியாது நான் சிறை செல்வது. ஒருவர் - என் குடும்பத்திலேயே அளவு கடந்த நம்பிக்கையுடன் என்னால் நேசிக்கப்படுபவர் - என்னுயிர் இளவல். அவர் மாத்திரம் அறிவார் இதனை. ஆனால் அவர் என்றுமே என் சொல்லுக்கு எதிர் பேசாதவர், என்னைத் தன்னுயிரென எண்ணுபவர். - இவர்களத்தனை பேரும் இதயத் திரையில் படமெனத் தோன்றினர்; ஒருவர் பின் ஒருவராக. ஏழு நாட்கள். சிறைச்சாலை - வெளி உலகிற்கும் அதற்கும் எவ்வித தொடர்புமே கிடையாது. பயங்கரக் குற்றவாளிகள், கொலைகாரர்கள், கொள்ளையடித்தவர்கள், கல்நெஞ்சர் கள், கயவர்கள், கற்பழித்தவர்கள், கன்னக் கோலிடு பவர்கள் இவர்களிற் பெரும்பான்மையானோர் தானே அங்கேயிருப்பவர்கள்.

எண்ணவே இதயம் 'வெலவெல'த்தது. வெளியுலகின் அழகை - பரந்த வெளியை, நிறைந்த பசுமையை, அன்பு பாராட்டும் மக்களை ஏழுநாட்கள் காணவே முடியாது. கவலையால் முகம் கருகத் தொடங்கியது. ஏழுநாட்கள் எப்படி நகரப் போகின்றன...? எவ்வளவு இனிய அனுபவங்களை இழக்க வேண்டியிருக்கிறது.

- அருமையான நண்பர்கள் - சிரித்துப் பேசி இதயத்தோடு இதயம் கலந்துறவாடும்

உண்மைத் தோழர்கள் - ஏழு நாட்களுக்கு 'அப்படி' இருக்க முடியாது.

- புத்தம் புதிய இன்பத் தேன் சுரக்கும் புத்தகங்கள், பத்திரிகைகள், இலக்கியப் பேச்சுக்கள், எழுத்துக்கள் - ஏழு நாட்களுக்கு இல்லை.
- அழகான காட்சிகள், மலர் போன்ற மனங் கொண்ட குழந்தைகள், மனம் போன போக்கில் கட்டற்றுப் புறப்பட்டுலாவும் சுதந்திரம், இனிய நினைவுகள்-எல்லாம் நடவாது ஏழு நாட்களுக்கு.
- எல்லாவற்றுக்கும் மேலாக அவளை - என் இதயங்கவர்ந்த அவளை - இதயத்து அரசியை - நான் சிரித்தால் தான் சிரித்து, நானழுதால் தானழுது - இன்பத்தில் இன்பமாய், துன்பத்தில் துன்பமாய் என்னோடு ஒன்றிவிட்ட அவளை - அவள் வண்ண முகத்தை, தண்ணமுதப் பேச்சை, எண்ணமெலாங் கொள்ளையிடும் எழிலுருவைக் காணமுடியாது - ஏழு நாட்களுக்கு.

வானில் நிலவிருக்கும். மலரில் மணமிருக்கும். ஊனில் உயிரிருக்கும். - ஆனால் அவளருகில் நானில்லை - ஏழு நாட்களுக்கு. அவளை மறக்கத்தான் வேண்டும். நெஞ்சப் பட்டடையைவிட்டு நீங்காது சுழல்கிறாளே அவள் - கண்ணே. நீயுந்தான் மறக்க வேண்டும் ஏழு நாட்கள் என்னை. முடியாதுதான், முயற்சித்துப்பார். 'இதயமில்லையா இவனுக்கு?' என்று ஏசுகிறாயா, என்செய்வேன் நான் வருகிறேன் வருந்தாதே....





நெஞ்சின் அலைகள் ஓயவில்லை. காலம் எழுப்பிக் கொண்டிருக்கும் கனவுகள் கலையவில்லை. வண்டி சிறைச்சாலையை அண்மி விட்டது. மாலை மலரும் நேரம். கோட்டை மதிலின் உயர்ந்த சுவர்களைத் தாண்டி, மலைப்பாம்பு போல் நீண்டு வளைந்து, இருண்டு கிடந்த தார் மெழுகிய வீதியில் தவழ்ந்து வண்டி சிறைச்சாலை வாசலில் வந்து நின்றது.

✶ ✶ ✶

சிறைச்சாலை. தன் அகன்ற பெருவாயைத் திறந்து கொண்டு எங்களை ஏற்கத் தயாராகிவிட்டது. அதோ. அதன் பெரிய கதவுகள் திறக்கப்பட்டுவிட்டன. ஒருவர் பின் ஒருவராகப் பன்னிருவரும் உள் நுழைந்தோம். வெளியுலகம் இருண்டு விட்டது. எங்கள் உள்ளங்களில் நிறைந்துவிட்ட 'இருளைப் போல. இரவு ஏழுமணி.

✶ ✶ ✶

இப்பொழுது நாங்கள் சிறைக் கைதிகள். இதோ நான் அணிந்திருக்கும் உடை. நான் நானா என்ற சந்தேகமே வந்து விட்டது. இந்தச் சிறையுடையை நான் அணியப்பட்ட பாடு - என்னைத் தெரிந்த ஒரு 'சிறைப் பறவை'யின் துணைதான் - எனக்குத் தெரியாத இச்சிறை உடையை அணியும் முயற்சியில் என்னை 'வெற்றி'பெறச் செய்தது. சிறையுடையுடன் ஒருவரை ஒருவர் திரும்பிப் பார்த்தோம். முகங்களின் காம்பீர்யம் மடிந்து கொண்டிருந்தது. புது அனுபவமாதலால் கண்கள் கலங்கிக் கொண்டிருந்தன. எங்கள் வெளியுலக

உடைகள், தோற்றங்கள் அனைத்தும் களையப்பட்டு விட்டன. சிறைச்சாலை நியதியின்படி எங்களிடமிருந்த எல்லாப் பொருட்களையும் வாங்கிக் கொண்டார்கள். என்னுடைய காலணிகள்கூட அவர்களிடமிருந்து தப்ப முடியவில்லை. அருமையான இரண்டு இலக்கிய நாவல்கள் வாசிப்பதற்காகக் கொண்டு சென்றிருந்தேன். அவைகூட அனுமதிக்கப்படவில்லை. நந்திக் கலம்பகத்தின் செந்தமிழை - நந்திவர்மனின் தமிழ்ப்பற்றை, அவன் காவியக் கதையைக் கூடப் படிக்கமுடியாது போய்விட்டது. எனக்கு உயிரையே பறித்து விட்டது போன்ற உணர்ச்சியேற்பட்டது. 'வெறும் இலக்கியப் புத்தகங்கள் தான் அவை. அரசியல் பற்றி ஒரு எழுத்துக் கூட அந்தப் புத்தகங்களில் இல்லவே யில்லை' என்று, வாதாடிப் பார்த்தேன். பயனில்லை. அவ்வளவு ஞானசூன்யமான அதிகாரிகளும் - அரசாங்க மும். தமிழரசுக் கட்சியின் சாதாரண உறுப்பினர் ஒருவருக்கு இவ்வளவு அச்சப்பட எவ்வித அவசியமுமே யில்லை. இன்றைய அரசாங்கத்திற்கு. 'எங்கள் காலணிகளும், இலக்கிய நாவல்களும் அரசாங்கத்தை ஆட்டிப் படைத்து விடும் - வீழ்ச்சியடையச் செய்துவிடும்' என்ற அச்சம் அவர்களுக்கிருந்தால் பேசாமல் அரசாங்கப் பொறுப்பை - இல்லை, தமிழ் பேசும் மக்களின் அரசியல் - ஆட்சி நிர்வாகத்தையாவது எங்களிடம் ஒப்படைத்துவிடுவது தான் நியாயமானது. 'சீப்பை ஒளித்துவிட்டால் திருமணம் நின்றுவிடும்' என்ற சித்த சுவாதீனமற்ற போக்கை அனுட்டிப்பது அநாகரிகமாகும்.

* * *





ஆளுக்கு ஒவ்வொரு உணவுத்தட்டு, தேநீர்க் கிண்ணம், தலையணை, பாய் இத்தியாதிப் பொருட்கள் வழங்கப் பட்டன. விடுதலையடையும்போது அவற்றை ஒப்படைக்கா விட்டால் 'இன்னல்கள்' நேருமென எச்சரிக்கப்பட்டது. 'இரவு உணவு' முடிந்ததும் அழைத்துச் சென்றார்கள் சிறையின் அந்தப்புரத்திற்கு. அவசரகால நிலைமை அமுலிலிருந்தது. சுதந்திரமாக வாழுமுரிமையுடைய சாதாரண மக்களே மாலை ஆறுமணி என்றதும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடுகிற காலம். ஒரே பயமும் திகிலும் மக்களைப் பிடித்தாட்டின. சிறைவாசமென்றாற் சொல்ல வேண்டுமா? நெஞ்சம் திடுக்கிடும் காட்சிகள். பயங்கர மனிதர்கள். சிறைச்சாலையில் இடமேயில்லை. ஒரே நெருக்கம். மக்கள் அரசாங்கம் பதவிக்கு வந்தபின், எல்லா மக்களையும் இங்கேயே அனுப்பி வைத்திருக் கிறார்களோ என்ற சந்தேகம் வந்துவிட்டது எனக்கு. ஒருவாறாக எங்களுக்கெனச் சில இடங்களை ஒதுக்கினர் சிறையதிகாரிகள்.

ஒரு அறையில் நானும், நண்பர் புதுமைலோலனும், இன்னொரு தோழரும் அடைக்கப்பட்டோம். படுக்கையை விரித்துப் படுத்துக் கொண்டோம். அறை விளக்கு அணைந்தது. சிறைக்கைதிகளின் 'கூச்சல்கள்' அடங்கின. ஜெயில் காவலர்களின் பாரமான காலணி களின் 'டக், டக்' என்ற ஒலி நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டிருந்தது. நண்பர்கள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். எனக்குத் தூக்கமே வரவில்லை. 'புரண்டு, புரண்டு' படுத்தேன். நீண்ட நேரச் செலவின் பின் எப்படியோ கண்கள் மூடிக் கொண்டன. புதன்கிழமை

போயேவிட்டது. அதிகாலை ஆறரை மணி; ஜெயில் காவலர் 'அறையைத் திறந்தார்'. கண்களைக் கசக்கிக் கொண்டே வெளியே வந்தோம். எங்கோ 'புதிய ஒரு வேதனை உலகத்தில்' ஒரு நாளைக் கழித்து விட்டோமென்ற உணர்வு கிளர்ந்தது. 'முதல் இர'வல்லவா?

எல்லாக் கைதிகளும் உணவுத் தட்டுக்களுடன் காலை உணவுக்குக் காத்திருந்தனர். எங்களுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. விடிந்ததும் விடியாததுமாக உணவுக்குக் காவலா? ஒருவேளை உணவுக்கு வழியின்றிக் 'குற்றங்கள்' புரிந்து சிறைக்கோட்டம் வந்தவர்களை இப்படி உணவுக்குக் காத்திருக்க வைப்பதன் மூலம் 'ஆளாக்கி' விடலாமென அரசாங்கம் எண்ணுகிறதோ?

அவசரம் அவசரமாகக் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு 'தொல்லையில் ஒன்றேயாகித் துறைதொறும் பரந்து நின்ற 'நீண்ட கியூ' வரிசையில் எங்களையும் சேர்த்துக் கொண்டோம். 'மக்கள் அரசாங்கத்து' ஆளுகையில் நாடு முன்னேறுவதைப் போலக் 'கியூ' வரிசை நகரத் தொடங்கியது.

கால் இறாத்தல் பாண், சிறிது சம்பல், ஒரு தேக் கரண்டியளவு சீனி, கொஞ்சம் மல்லித் தண்ணீர் வழங்கப்பட்டது. இவைதாம் காலை ஆகாரம் கைதிகளுக்கு. இலங்கையரசாங்க அமைச்சர்கள் எல்லாரும் அடிக்கடி சொல்லும் ஒரு சொல் 'சோஷலிசம்' என்பது. எல்லாரையும் சமதர்மத்துடன் நடத்த வேண்டும் என்பது சோஷலிசம் கூறும் கருத்து. அந்தக் கருத்தை இலங்கையமைச்சர்கள் சிறைச்சாலையில் மாத்திரம்





அமுல் செய்கிறார்கள் போலும். அரசியல் காரணங்களுக்காகச் சிறைத்தண்டனை அனுபவிப்பவர்களை அதற்கென்று தனிப்பிரிவில் வைத்துக் கண்காணிப்பது உலகின் ஏனைய நாடுகளில் நடை முறையிலிருந்து வரும் ஒரு நல்ல பழக்கம். நல்ல பழக்கங்களுக்குப் பரம வைரியான நமது 'மக்கள் அரசாங்கம்' சிறையில் - அரசியல் கைதிகளான எங்களைத் தனக்கேயுரித்தான 'சமதர்மத்துடன்' ஏனைய கொலை, கொள்ளை, கொடூரப் பயங்கரக் குற்றவாளிகளைப் போலவே நடத்திற்று. அந்த வகையிலாவது இவர்களுக்குச் 'சமதர்மம்' சரி வந்ததேயென நாங்கள் ஆறுதலடைந்தோம். பலரகப் பட்ட குற்றவாளிகளின், கைதிகளின் மனோ பாவங்களை அறியக்கூடிய வாய்ப்புக் கிடைத்ததற்காக மகிழ்ச்சியடைந்தோம்.

உணவுத் தட்டை எடுத்துக்கொண்டு சாப்பிடத் தொடங்கியதும் எனக்கு வயிற்றைக் குமட்டியது. மிளகாய்த் துவையலின் நாற்றம் மூக்கைத் துளைத்தது. கண்கள் கலங்கின. நண்பர் புதுமைலோலனைப் பார்த்தேன். அவரும் அதே நிலை. எங்களில் ஒருவராக வந்த, அனுபவமும், அறிவு முதிர்ச்சியும் படைத்த பேராசிரியர் ஒருவர் ஆறுதல் வார்த்தைகள் கூறி எம்மைத் தேற்றினார். ஒருவாறாக உண்டு முடித்தோம்.

இரண்டாம் நாள். வியாழன். கைதிகளுக்கு வேலை குறிப்பிடும் இடத்திற்கு எங்களை அழைத்துச் சென்றனர். புதிய அனுபவம். கரடுமுரடான வார்த்தைகள், அன்பின் அடையாளத்தையே காண முடியவில்லை. 'கருணை காலமாகிவிட்டது இந்த உலகத்திலே' என்பதை

உணரத் தொடங்கினோம். கைதிகளும் மனிதர்கள் தாமா? அவர்களுக்கு இதயங்களும், இன்பதுன்ப உணர்ச்சிகளும், வாழவேண்டும் என்ற வேட்கையும் இருக்கின்றனவா? - இப்படியான கேள்விகள் என் இதயக்கடலில் அலைமோதத் தொடங்கின. 'அந்த உலகத்து' நிகழ்ச்சிகள் என்னை அங்ஙனம் எண்ண வைத்தன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலை குறிக்கப்பட்டது. சமையலறையில் வேலை செய்தல், விறகு வெட்டுதல், சிறைக்குள்ளே விரிந்து கிடக்கும் முற்றத்தைச், சுற்றுப்புறங்களைக் கூட்டுதல், சிறைக்கு வெளியே பரந்து விரிந்துள்ள மைதானத்தை, அதன் நாற்புறமும் அழகும், ஆடம்பரமும் நிறைந்து விளங்கு வனவாயுள்ள அதிகாரிகளின் வாசஸ்தலங்களைக் கூட்டுதல் எனச் சிலபல வேலைகள் எமக்குத் தரப் பட்டன. அத்துடன் ஒவ்வோரு எண்ணும் கொடுக்கப் பட்டது. இலக்கம் '2716' என்று எந்த அதிகாரியாவது அழைத்தால் உடனே யான் குரல் கொடுக்க வேண்டும். மதிய உணவுக்கு ஒரு மணி முன்பதாகக் கைதிகள் வேலை செய்வது நிறுத்தப்படும். சரியாகப் பன்னிரண்டு மணிக்கு மதியஉணவு. அதன்பின் பிற்பகல் இரண்டு மணிவரை ஆறுதல், அடைக்கப்பட்ட அறைக்குள்.

மதிய உணவும் காலை உணவுக்குக் குறைந்த தல்ல. புனிதத்தை விரும்பிய நாங்கள் மரக்கறியுணவையே விரும்பி உண்டோம். அளவான சோறு, கால் இறாத்தல் பாண், இரண்டுவகை மரக்கறிகள். புலாலுணவு விழைவோர்க்கு அதுவுங் கிடைத்தது. உணவின் தரத்தைச் சொல்லாலே விளக்கமுடியாது. சுவைத்துப் பெறவேண்டிய அனுபவம் அது.





மாலை உணவும் இத்தகைய 'மகிமை'யுடையதே. பிற்பகல் நாலரை மணிக்கே மாலையுணவு தரப்பட்டு 'அறைகளுக்குள்' அடைக்கப்பட்டுவிடுவோம். இரவு ஏழு மணிக்கு மல்லித்தண்ணீர் தரப்படும். அந்த மல்லித் தண்ணீருடன் மாலைஉணவு நேரத்தில் தரப்பட்ட பாணையும் சேர்த்துச் சுவைக்கும்போது எங்களுக் குண்டாகும் 'உணர்ச்சியை' இதயக் கிளர்ச்சியை எளிதிற் கூறிவிட முடியாது. இன்பமோ, துன்பமோ, அல்லது அவையிரண்டும் கலந்துவிட்ட ஒரு புதுவகை உணர்ச்சியோ எங்கள் உள்ளங்களை நிறைத்துவிடும். நாளடைவில் நாங்கள் இந்த வாழ்க்கைக்கு ஓரளவு பழக்கப்பட்டுக் கொண்டிருந்தோம். ஆனால் இடை யிடையே வெளியுலக உணர்ச்சி - பழைய நினைவுகள் வந்துவிட்டால் சில நிமிட நேரங்கள் எங்களை மறந்தவர்களாய் 'சித்தப்பிரமை' கொண்டவர்கள் போல் மௌனமாகிவிடுவோம்.

இரவு எட்டு எட்டரை மணிக்கெல்லாம் சிறையின் 'சலசலப்பு' அடங்கிவிடும். பின்னர் காலை ஆறரை மணிவரை சிறைக்கதவுக்குள், தடித்துப் பருத்த, பணக்கார வீட்டுப் பெண்களின் தசை பூரித்து நிற்கும் 'மொழு மொழு'ப்பான தேகக்கட்டைப் பிரதிபலிக்கும் சுவர்களின் மத்தியில் நாங்கள் தூங்காமல் தூங்க வேண்டும். நண்பர் புதுமைலோலனும் நானும் பெரும்பான்மையான இரவுகளில் பதினொரு மணிவரை பல விடயங்களை அலசியாராய்ந்து விட்டுத்தான் நித்திரை செய்வோம். அரசியல் தொடக்கம் அடுப்பங் கரை வரை எங்கள் பேச்சு நீளும். உலகின் பல்வேறு நாடுகள், ஆட்சிமுறைகள், வினோதமான பழக்கவழக்

கங்கள், அரசியல் தலைவர்களின் 'அற்புதங்கள்' நிறைந்த வரலாறுகள், அகிலத்தையே ஆட்டிப்படைத்த அழகுராணிகள், அவர்களின் காதல் ரகசியங்கள், தமிழ்ப் பெரும் புலவர்கள், தமிழ்க் காதல் இலக்கியங் கள், காதல் அனுபவங்கள், இலங்கையின் எதிர்காலம் - இத்தகைய பலதரப்பட்ட விடயங்களைப் பற்றி நாங்கள் சுவையாகப் பேசிக் கொண்டிருப்போம்.

ருசிகரமான விடயங்களைப் பற்றிப் பேசுகையில் உற்சாகம் மேலிட்டு நாங்கள் உரக்கச் சிரிப்போம். என்னுடைய சிரிப்பொலி கட்டுமீறிக் கிளம்பிவிடுவது முண்டு. நண்பர் புதுமைலோலன் கூறுவார், 'சிறைச்சாலைக்குள் இருக்கிறோமென்பதைக் கூட மறந்துவிட்டீராக்கும்.'

'ஆட்சியாளர்கள் எங்களைச் சிறையில் வைக்கலாம். ஆனால் எங்கள் இதயங்களைச் சிறையில் வைக்க முடியுமா?'

'பெரிய புரட்சி வீரர்கள்..!'

இருவரும் சேர்ந்து சிரிப்போம்.

* * *

நண்பர் புதுமைலோலனுக்குச் சிறைக்குள்ளே கூட்டுகிற வேலை. எனக்கு வெளியே கூட்டுகிற வேலை. இதனால் வேலை நேரத்தில் இருவரும் பிரிந்து செல்ல நேர்ந்தது. இது எனக்கு மிகவும் துன்பத்தையளித்தது. பேசிக்கொண்டிருக்க துணையில்லையே என ஏங்க நேர்ந்தது. வெளியுலகத்திலே தான் எத்தனையோ





'பாட்டி' (கட்சி) களைக் கண்டிருக்கிறோம். அவையே பெரிய தொல்லை. சிறைக்குள்ளே கூட அவை நுழைந்து விட்டன என்பதைக் கைதிகளும், சிறைக்காவலர்களும் பேசிக்கொள்வதிலிருந்து தெரிந்து கொண்டேன். அவர்கள் பேச்சில் என் பெயர் கூட அடிபட்டது. எனக்கு ஒரே கோபம், கோபமாக வந்தது. என் சம்மதமில்லா மலே எப்படி என்னை ஒரு கட்சியில் சேர்த்துக் கொள்வ தென்று ஆத்திரப்பட்டேன்.

ஏய், இந்தக் கூட்டுப்பாட்டி, லற்றின் பாட்டி, தண்ணீர்ப் பாட்டி, கிச்சின் பாட்டி, எல்லாப் 'பாட்டி'க்காரர்களையும் வரச் சொல்.' ஒரு சிறைக்காவலர் எல்லாப் பாஷைகளுக் கும் சம அந்தஸ்துக் கொடுத்து உத்தரவு போட்டதைக் கேட்டதும் எனக்குண்டான ஆத்திரம் வந்த இடந் தெரியாமல் வழிக் கொண்டுவிட்டது. ஆச்சரியத்தால் அப்படியே நின்று விட்டேன். 'அந்த உலகத்து'ப் பாட்டி (Party)கள் அவை.

'கூட்டுப்பாட்டி' வேலை அவ்வளவு சுலபமானதல்ல என்றாலும் என்னைச் சிறைக்கு வெளியே கூட்டும்படி பணித்ததால் வெளியுலகைச் சிறிதளவாவது பார்க்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. காலை ஏழுமணிக் கெல்லாம் வேலைக்குச் சென்று விடவேண்டும்.

அனுபவம் மிக்க சிறைப் பறவைகளுக்கெல்லாம் இந்த வேலைகள் ஒரு தூசிக்கு நிகர்.

அவ்வளவு எளிதில் அவர்கள் எத்தகைய கடினமான வேலையையும் 'செய்து முடித்து' விடுவார்கள். எங்களைப் போன்ற புதியவர்களுக்கோ, பிராண அவஸ்தை.

கூட்டிக்கூட்டி உடல், உள்ளம், உயிர் அனைத்துமே சோர்ந்துவிட்டது. போதாக் குறைக்குச் சிறைக்காவலன், 'நான் மிகவும் மெதுவாக வேலை செய்கிறேன்' எனச் 'சர்டிபிகேட்' வழங்கினான். அந்தச் சிங்களச் சிறைக்காவலனிடம் 'ஐ ஆம் வெரி ரயர்ட்' (நான் மிகவும் களைத்து விட்டேன்) என்று சொல்லிச் சற்று ஆறுதல் எடுத்துக் கொண்டேன். உள்ளத்திலே பற்பல எண்ண அலைகள்.

'என்னுடைய தேசத்திற்காக - இனத்திற்காக ஏதோ பெரியதொரு தியாகத்தை நான் செய்யவில்லை - செய்யக் கூடிய ஆற்றலுண்டா என்பதும் எனக்குத் தெரியவில்லை. ஆனால், இப்பொழுது நான் செய்வது தியாகமா? பலர் அதை ஒப்புக் கொள்ளாமலிருக்கலாம். ஆனால் ஏதோ ஒரு நம்பிக்கைதானே என்னை இப்படிச் செய்யத் தூண்டிற்று. அந்த நம்பிக்கையின் பெயர் தியாகமாகவோ அல்லாமலோ இருக்கலாம். எப்படியிருப் பினும் அந்த நம்பிக்கை புனித மானது; தன்னலமற்றது என்பது மாத்திரம் முழு உண்மை.'

நிம்மதியுடன் மீண்டும் வேலை செய்தேன். சில தடவைகளில் வேலை செய்யும்பொழுது நான் கற்பனா உலகில் சஞ்சரிக்கத் தொடங்கி விடுவதுமுண்டு. ஆனால் என்னைப்பற்றி ஓரளவு புரிந்து கொண்ட அச்சிறைக்காவலன் 'என்னைக்' கண்காணிப்பதைக் குறைத்துக் கொண்டான்.

ஒருமுறை கையிலுள்ள விளக்குமாற்றையும், அதனை அழுந்தப் பிடித்ததாற் 'கண்டி'ப் போய்விட்ட தசைப் பரப்பையும் பார்த்தபோது எனக்கு அழுகையே





வந்துவிடும் போலிருந்தது.

'கன்னித் தமிழிலே கதைகளையும், கட்டுரைகளையும், கவிதைகளையுமே எழுதி எழுதி இன்பமடைந்த என்னை இப்படிக் கஷ்டப்படுத்தலாமா?

ஐயோ, இந்த விளக்குமாற்றுப் பேய் என் உதிரம் முழுவதையுமே குடித்துவிட்டது. என்னால் தாங்கமுடியவில்லையே.' - என என் கை என்னைப் பார்த்து ஓலமிடுவதைப் போன்ற உணர்ச்சி குமுறியெழுந்தது. சிரமப்பட்டுச் சமாளித்துக் கொண்டேன்.

இன்னொரு தடவை.

இலங்கை சுதந்திரமடைந்ததாகக் கூறப்பட்டுவரும் பத்து ஆண்டுகளிலே தமிழினம் அடைந்து தீர்த்த அளப்பரிய இன்னல்கள் என் நினைவுக்கு வந்தன. எதிர்காலத்தின் இருள் மண்டிய தோற்றம் என்னைப் பயமுறுத்தியது.

- யூ.என்.பி. ஆட்சிக் காலத்திலே அக்கட்சியின் தலைவராகவும், நாட்டின் முதலமைச்சராகவும் விளங்கிய காலஞ்சென்ற திரு.டி.எஸ். சேனநாயகா தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளனைத்தையுமே ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற மனோ பாவத்துடன், 'நாக்கு நுனிக்கண் நறுந்தேனும், நெஞ்சத்து நீக்கரிய நஞ்சும்' நிறைந்தவராகத் திட்டமிட்டுப் பல சட்டங்களை ஆக்கிய கொடூரத் தன்மை நினைவுக்கு வந்தது. குடியேற்றத்திட்டங்கள், மலைநாட்டுத் தமிழர்கள் வாக்குரிமை, பிரசா உரிமை

ஆகியவற்றைப் பறித்தல் என்பவற்றின் விசுவரூபம் இப்பொழுது தெரிகிறதல்லவா?

- அவர் மறைவுக்குப் பின் 'தேசாபிதாவின் திருமகனான' டட்லி 'அரியணை' யேறியதும், அவராட்சியில் நாடு கண்ட 'அல்லோலகல்லோலங்கள்' மனக்கண்முன் நடமிட்டன. 1953ல் தென்பகுதியில் நடைபெற்ற புரட்சியும், டட்லியின் அரசியல் துறவும் நினைவில் வந்தது. அந்தப் புரட்சியின் போது பண்டிதர் பெரியதம்பிப்பிள்ளை என்ற தமிழர் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்டதும் நினைவில் மிதந்தது.

- அதற்குப் பின்னர் 'பாண்டுங் வீரர்' சேர் ஜோண் கொத்தலாவலை முதலமைச்சர் பதவி பெற்றதும் அவரது 'சண்டப் பிரசண்ட' அரசியல் சவடால்களும் ஞாபகத்திற்கு வந்தன. சேர் ஜோண் யாழ்ப்பாண வருகை புரிந்தபோது அளிக்கப்பட்ட 'மகத்தான' வரவேற்பும், தமிழரசுக் கட்சி அவ்வமையமளித்த கறுப்புக் கொடி வரவேற்பும் நெஞ்சில் கிளர்ந்தது. யாழ்ப்பாண நகரமண்டப முன்றலில் அவருக்களிக்கப்பட்ட வரவேற்பின் போது தமிழரசுத் தொண்டர்கள் கறுப்புக் கொடி காட்டித் திரும்பிப்போ கோஷ மிட்டதும், யூ.என்.பி. ஏவல் பொலிஸார் பொது மக்களைக் குண்டாந்தடி கொண்டு சாடியதும், கறுப்புக் கொடி காட்டும் வைபவத்தில், ஆசிரிய மாணவனாக இருந்த நான் பங்குபற்றியதும்





நினைவில் நீங்காது மிளிர்ந்தன.

- கொக்குவில் கூட்டத்தில் கொத்தலாவலை அவர்கள் தமிழுக்குச் 'சம அந்தஸ்து' அளிப்பதாகக் கூறிவிட்டுக் கொழும்பு திரும்பியதும், சிங்கள வெறியர்களின் எதிர்ப்பைக் கண்டதும் 'சிங்களம் மட்டும்' கோஷத்தைக் கிளப்பியதும் மனதில் மறையாது மலர்ந்தது.

- பெரும்பெரும் பதவிகளிலிருந்த தமிழர்களத் தனைபேரும் 'சட, சட' வெனப் பதவிகளிலிருந்து சரிக்கப்பட்டதும் சாகாத நினைவாய் நின்றது.

* * *

- 1956 பொதுத் தேர்தல் நிகழ்ந்தது. கொத்தலாவலை அரசாங்கம் பதவியிழந்தது. பண்டாரநாயக்காவின் எம்.இ.பி. பதவிக்கு வந்தது. வகுப்புத் துவேஷத்தின் தத்துப்பிள்ளையாக, சிங்கள வெறியர்களின் செல்லப்பிள்ளையாக உருவான இந்த அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றதும், உடனடியாகத் தமிழ்ப் பேசும் மக்களையும், தமிழையும் ஒழித்துக் கட்டும் திருப்பணியில் வெகு தீவிரமாக உழைக்கத் தொடங்கிற்று.

- 1956 ஜூன் 5ம் நாள் பாராளுமன்றத்தில் 'சிங்களம் மட்டும்' சட்டம் உருவாக்கப்பட்டு நிறைவேறியது. தமிழர்கள் அத்தினத்தைத் துக்கதினமாகக் கொண்டாடினர். தமிழரசுக்

கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் 'சிங்களம் மட்டும்' சட்டத்தை எதிர்த்துக் கொழும்பு 'காலிபேஸ்' (காலிமுக) மைதானத்தில் சத்தியாக் கிரகஞ் செய்தனர். சிங்களக் காடையர்களும், புத்த பிக்குகளும், அரசியல் யோக்கியதையே இல்லாத இராசரத்தினாக் கும்பலும் சத்தியாக் கிரகிகளை அடித்து, உதைத்து, சித்திரவதை செய்தனர். சத்தியாக் கிரகிகளின் உடைகளைக் கிழித்தனர். உடைமைகளைப் பறித்தனர். காதுகளைக் கடித்தனர். கைகளை முறித்தனர். அப்பப்பா. இத்தனை கொடுமைகளையும் பாரிற்கு 'பஞ்சசீல' உபதேசஞ் செய்யும் பண்டாரநாயக்கா அரசாங்கம் பார்த்துக் கொண்டுதானிருந்தது. மறைமுகமாகவும் பகிரங்கமாகவும் ஆதரவளிக்கக்கூடத் தயங்கவில்லை. கல்லோயாவிலும் கொழும்பிலும் பிறபகுதிகளிலும் தமிழர் படுகொலை செய்யப்பட்டனர். கொள்ளையடிக்கப் பட்டனர். கொடுமைகளுக்காளாயினர். தொடர்ந்தன இத்தகைய தொல்லைகள்.

1957 பெப்ரவரி 4ம் நாள் திருகோணமலையில் 'சிங்கள சுதந்திர'த்தினக் கொண்டாட்டத்தில் வெறிகொண்டு ஆடிய சிங்களக் கயவன் ஒருவன் சுட்டுக் கொன்றான் ஒரு தமிழனை. - திருமலைத் தியாகி தீரன் நடராசன் தமிழுக்காகத் தன்னுயிரீந்து அமரனானான், அன்றுத்தினம்.

1957 ஆகஸ்ட் போருக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தோம். பண்டாரநாயக்கா அரசாங்கம்





பதறியது. 'சமாதான சக வாழ்வே' எமது இலட்சியம் எனப் பசப்பித் தமிழரசுத் தலைவர் களுடன் ஒப்பந்தஞ் செய்து கொண்டது ஜுலை 26 ல்.

காலங் கடந்து கொண்டிருந்தது.

1958 வந்தது. ஒப்பந்தம் உடனடியாக அமுல் செய்யப்பட வேண்டுமெனத் தலைவர்கள் வற்புறுத்தினார்கள். தயங்கியது அரசாங்கம். மார்ச் மாதத்தில் சிங்கள சிறீ பொறித்த பஸ்களைத் தமிழ்ப் பிரதேசத்திற்கு அனுப்பி வைப்பதன் மூலம் ஒப்பந்தத்தையே அரசாங்கம் உதாசீனஞ் செய்தது. சிங்கள சிறீ எதிர்ப்பு ஆரம்பிக்கப்பட்டது. அரசாங்கம் படுதோல்வியடைந்தது. தமிழ்ப் பிரதேசத்தில் ஒரு சிங்கள சிறீப் பொறித்த 'பஸ்' வண்டியும் தலைகாட்ட முடியாது போய்விட்டது. 'சிங்கள சிறீ' எதிர்ப்பில் ஈடுபட்டதாகப் பலர்மீது வழக்குகள் தொடரப்பட்டன.

- தோல்வியால் துவண்டு கிடந்த அரசாங்கத்தை 'ஆட்டிப் படைக்க' முன்வந்த மஞ்சளுடை மர மண்டையருக்காக, ஒப்பந்தத்தையே கிழித்தெறிந்தார் முதலமைச்சர். அவனியே அதிசயிக்கத்தக்க அரசியல் 'அநாகரிக' மாக அமைந்து விட்டது அது. சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டக் காலத்திலே மலைநாட்டுத் தமிழர் இருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப் பட்டனர். கொலை. கொலை.. கொலை... பண்டாவின் ஆட்சியிலே. 'மக்கள்' அரசாங்கத்தின் ஆளுகையிலே.
- 1958 மேத் திங்கள் 23, 24, 25ந் தேதிகளில்

வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் தேசிய மகாநாடு நடைபெற்றது. தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைப் போராட்டங்களுக்கான திட்டங்கள் வெளியிடப்பட்டன. அரசாங்கம் அச்சத்தால் 'பதைபதை'த்தது. மகாநாட்டில் கலந்து கொள்ள மட்டக்களப்பிலிருந்து வந்தவர்களையெல்லாம் பொலனறுவையில் புகைவண்டியில் வைத்தே கொடுமைப்படுத்தியது. சித்திரவதை செய்தது. சிங்களக் குண்டர்கள் கூட்டம். அரசாங்கம் 'அமைதி' யாக இருப்பதாகப் பாவனை செய்தது. மாநாடு முடியுமுன்பே தமிழர்கள் படையெடுத்து விட்டனர் என அகில இலங்கையிலும் அலறினர் அரசாங்கமும், சிங்கள ஏகாதிபத்தியக் காடையர் கும்பலும். முடிவு...?

நாடு முழுவதும் குழப்பங்கள் மலிந்தன. தமிழருக் கெதிரான சகல தீச்செயல்களும் தீவிரமாக்கப்பட்டன. கொழும்பிலே, பாணந்துறையிலே, காலியிலே, அநுராத புரத்திலே, பொலனறுவையிலே எங்கும் - முழு இலங்கை யிலும் தமிழர்கள் ஈவிரக்கமின்றித் தாக்கப்பட்டனர். குடும்பங்கள் குடிபெயர்ந்தன. கடைகள் காலியாயின. உத்தியோகங்கள் கைவிடப்பட்டன. கொலை, கொள்ளை, கற்பழிப்பு எல்லாக் கொடுமைகளும் அளவின்றி நிகழ்ந்தன. அரசாங்கம் கூடப் பகிரங்கமாகத் தமிழர்களைத் தாக்கியது. தமிழர்கள் நிராயுதபாணி யாக்கப்பட்டனர். தலைவர்கள் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். பொலிஸூம், இராணுவமும் அளவிறந்த ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின.





ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்தது. அகதிகளின் தொகை பெருகிற்று. வீடு வாசல்களையிழந் தோர், பொருட்களையிழந்தோர், பிள்ளைகளையிழந்தோர், கணவனையிழந்தோர், கற்பையிழந்தோர் - வடித்த கண்ணீர் வெள்ளம் ஆறாக ஓடியது. அகிலத்தின் காதுகளே செவிடுபடும்படி அலறியது கண்ணீர்க்கடல்..

நிரபராதிகள் சிறைகளில் நிறைந்தனர். காவலில் கடுந்துயருழன்றனர். ஏற்பட்ட இன்னல்களை நினைந்து இரத்தக் கண்ணீர் வடித்தனர்.

இளகிற்றா அரசாங்கம்...? 'சிங்கள சிறீ' எதிர்ப்பு வழக்குகளும் விசாரணைக் கெடுக்கப்பட்டன. இன்னல்கள் மலிந்த இக்கால கட்டத்தில். அபராதப் பணஞ் செலுத்த மறுத்து அனைவருஞ் சிறையில் தவமிருந்தனர். செந்தமிழ் காக்க வருந்தினர்.

✶ ✶ ❖

சிந்தனை ஓட்டம் தேங்கி நின்றது. எண்ண அலைகள் என்னை எங்கெல்லாமோ இழுத்துச் சென்றதை உணர்ந்தேன். 'கூட்டுப் பாட்டி'யைச் சேர்ந்த அனைவரும் மதிய உணவுக்குச் செல்லத் தயாராகி நின்றனர். நேரம் பதினொரு மணிக்கு மேலாய்விட்டது.

வேலை முடிந்து விட்டது. இனியும் சிறைக்குள் நுழையத்தான் வேண்டும். அங்கே...? ஒருவர் இருப்பார். - அவரும் ஒரு சிறைக் கைதிதான். என்னைப் போலவே 'சிங்கள சிறீ' அழிப்புக் குற்றத்திற்காகச் சிறைக்கு வந்தவர். வயதும் அனுபவமும் முதிர்ந்தவர். ஆசிரியர்

- பேராசிரியர். அவர் என்னிலே காட்டுகிற பரிவை - அன்பை எண்ணியெண்ணி இதயமுருகுவேன். தந்தையின் பரிவும், தாயின் அன்புங் காட்டி என்னைத் தாங்குவார். அன்பினால் எங்கள் எல்லாரையும் ஆளுகை செய்த அவர் பெயர்கூட ஆள்வார்ப்பிள்ளை தான். தங்கமான மனிதர். மதிய உணவுக்குமுன் சிறீ அளித்த சிறைவாசிகள் பன்னிருவரும் குளித்துக் குதூகலமாக இருக்கும்படி செய்யாவிட்டால் அவர் மனந் தாங்காது. அவரைப் பார்க்கும்போதெல்லாம் என்னுள்ளமுருகும்.

எங்கெல்லாம் அன்பை எதிர்பார்த்தேனோ அங்கெல்லாம் கொடுமை மலர்ந்ததையே கண்டு கவலையுற்றவன் நான். நறுமணம் வீசுமென நம்பிய இடங்களிலெல்லாம் பிணவாடையே வீசிடக் கண்டு பீதிகொண்டவன் நான். கருணை கனியுமெனக் காத்திருந்த இடங்களிலெல்லாம் 'கயமை' தாண்டவமாடக் கண்டு கலங்கியவன் நான். எனவே ஆள்வார்ப்பிள்ளை ஆசிரியர் எனக்கு ஒரு புதிராக இருந்தார். மற்றவர்களுக்கெப்படியோ....?

ஆனால் யாராயிருந்தாலும் அவருடைய அன்புள்ளத்திற்கு அஞ்சலி செய்யாமலிருக்க முடியாது. அவரன்புள்ளம் வாழ்க!

நாட்கள் நகர்ந்தன. நாங்கள் எதிர்பார்த்திருந்த அந்த நாள் - விடுதலைநாள் - செவ்வாயாக மலர்ந்து எங்கள் முன் நின்றது. எங்களுக்கு ஒரே குதூகலம். வெளியுலகத்தின் உயர்ந்த அழகை, சிறை மதிலின் பாரித்துப் பரந்து, விண்ணளாவி நின்ற சுவர்களைக்





கடந்து காணப்போகிறோமென்ற மகிழ்ச்சியால் மனம் பூரித்தோம். செவ்வாய் காலையிலிருந்து உள்ளம் ஒரு நிலையி லில்லை. 'எப்பொழுது வெளியே செல்வோம்' என்று எங்கள் உள்ளங்கள் ஓயாது போராடிக் கொண் டிருந்தன. சரியாகப் பன்னிரண்டு மணிக்கு விடுதலை செய்தார்கள். சாதாரணமாகச் சிறை நீக்கப்படும் கைதிகளை எப்படி விடுதலை செய்வார்களோ அப்படியே எங்களையும் விடுதலை செய்தார்கள். சிறை உடுப்புக்கள், பிறபொருட்கள் அத்தனையும் அவர்களிடம் ஒப்படைத்து, எங்களிடமிருந்து அவர்கள் முதலில் பெற்றுக் கொண்ட பொருட்களை வாங்கிக் கொண்டோம். விடுதலைத் தினத்திலே கூடக் காலையில் நாங்கள் வேலை செய்தோம். மதிய உணவை அருந்திச் செல்லுமாறு சிறைக்காவலர் எங்களைக் கேட்டுக்கொண்ட போது நன்றி தெரிவித்து விட்டு வெளியேறினோம்.

என் கையில் 'நந்திக்கலம்பகம்' அலங்காரமாக மிளிர்ந்தது. சிறை வாழ்க்கையில் கண்ட புது அனுபவத்துடன் அதைப் பார்த்தபொழுது புதியதோர் உண்மை பளிச்சிட்டது. நந்திக்கலம்பக நாயகனான பேரரசன் நந்திவர்மன் தமிழின்மீது ஆராக் காதல் கொண்டவன். தமிழுக்காகவே உயிரீந்து தன்னிகரிலாச் சிறப்புப் பெற்றவன். 'நந்திக்கலம்பக'த்தில் 'அறம்' வைத்துப் பாடுவதன் மூலம் அவனைக் கொன்று அரசுரிமையெய்தலாம் என ஆசைப்பட்டவர்களின் வஞ்சத்தையறிந்தும், அதன் சுவைக்காக, நெஞ்சை யள்ளும் தமிழுக்காக, நந்திக் கலம்பகத்தை அரங்கேற வைத்து 'அறம்' பாடக்கேட்டு ஆவி துறந்தவன்.

தொண்ணூறு செய்யுட்கள் கொண்ட நந்திக்கலம்பகம் அரங்கேற்றப்பட்டபோது நந்திவர்மன் 'கலம்பக' ஆசிரியரின் கட்டளைப்படி நிர்மாணிக்கப்பட்ட தொண்ணூறு பந்தர்களிலும் முறை, முறை அமர்ந்தான். ஒவ்வொரு செய்யுள் பாடி முடியும்போதும் ஒவ்வொரு பந்தராகத் தீப்பற்றியெரிந்தன. தொண்ணூறாவது பந்தரில் - இறுதிச் செய்யுள் பாடப்பட்டது. மயானக் கிரியைகள் முடித்துத் தகனத்திற்காயத்தமாக விளங்கிய அப்பந்தரில் அமர்ந்த நந்திவர்மன் -

'வானுறு மதியை யடைந்த துன்வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறுபுலியை யடைந்ததுன் வீரம்
கற்பகமடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடஞ் சென்றாள்
செந்தழல் புகுந்ததுன் மேனி
யானுமென் கவியும் எவ்விடம் புகுவோம்
எந்தையே நந்திநாயகனே.'

என்ற செந்தமிழ்ச் செய்யுளைக் கேட்டுக் கொண்டே தமிழுக்கு வாழ்வு தந்து, எரிந்து சாம்பரானான். தமிழுக்கு வாழ்வுதர நந்திவர்மன் அப்படியானான் என்றால் தமிழ் காக்க நாம் சிறைக்கு மாத்திரமல்ல - செருமுகத்துக்கும் செல்லக் கடமைப்பட்டவர்கள். அன்னைத் தமிழின் மானங்காக்க மரணத்தையும் துச்சமாக மதித்து மறப்போர் புரியவேண்டியவர்கள்.

* * *

சிறையின் உயர்ந்த கதவுகள் 'வாய் பிளந்து'





வழிவிட்டன. வெளியே வந்தோம். எங்களை வரவேற்க வந்தவர்கள் மாலைகளுடனும், மலர்ந்த முகங்களுடனும் காட்சியளித்தார்கள். கைகூப்பி வணங்கினோம். கதராடை போர்த்து, மாலையணிவித்து வரவேற்றார்கள். நிழற் படமெடுத்துக் கொண்டார்கள். என் சிந்தனை சுழன்றது. அரசியல் வாழ்வே விசித்திரமானதுதான். அன்று காலைதான் - கையில் விளக்குமாற்றுடன் பார்க்கச் சகிக்க முடியாத பயங்கரத் தோற்றத்துடன் முகமெல்லாம் தாடி மீசையுமாகக் காட்சியளித்தேன். சிலமணி நேரம் செல்ல வில்லை - இதோ மலர் மாலையுடன் கதர்ப்போர்வையுடன், மலர்ந்த முகத்துடன் காட்சியளிக்கிறேன். வாழ்வு சுழல்கிறது. உலகமுஞ் சுழல்கிறது. காலம் மாறுகின்றது.

* * *

ஏழு நாட்கள் எப்படியோ ஓடிவிட்டன. சிறீ அளித்த சிறை முடிந்து விட்டது. அது தந்த அனுபவம் - அறிவு எங்கள் உள்ளத்தை விட்டு என்றுமே அகலாது. வரவேற்பும், சிற்றுண்டி விருந்தும் முடிந்தபின் நாங்கள் பன்னிருவரும் பிரிந்து வெவ்வேறு திசைகளிலே செல்லலாம். ஆனால் எங்கள் உள்ளங்களிலே அனல்விட்டொளிரும் சுதந்திரவேட்கை அணைந்து விடாது. தமிழ்ப் பற்றுத் தணிந்து விடாது. பிறந்த பொன்னாட்டுக்காக, பெற்ற தாய் மொழிக்காகச் 'சுதந்திரதேவி'யின் பாதகமலங்களில் ஆருயிரைத் தானும் அர்ப்பணிக்கத் தூண்டும் ஆவல் அகன்றுவிடாது.

'இதந்தரு மனையினீங்கி இடர்மிகு
சிறைப் பட்டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப் பழி
மிகுந்திட ருற்றாலும்
விதந்தரு கோடி யின்னல்விளைத்
தெமை யெதிர்த்திட்டாலும்
சுதந்திரதேவி யுன்னைத் தொழு
திடல் மறக்கிலேமே.'

என்று 'ஏகாதிபத்திய தாசர்களின்' இதயம் வெடிக்க ஆவேசக் குரலில் அமரகவி பாரதி கூறினானே, அதனைத்தான் நானுங் கூறுகிறேன். நந்தமிழுக்காக, நம்மினத்திற்காக, உழைக்க ஒன்று சேர்ந்து வாரீர், வாரீர் என அன்புக் குரலில் அழைக்கிறேன். வணக்கம்.

**வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்!!**

**வாழ்க தமிழரசு!!!**





## செந்தமிழ் காக்கச் சிறை சென்ற செல்வர்கள்.

செந்தமிழ் காக்கச் சிறை சென்ற செல்வர்கள், கன்னித் தமிழின் மானம் காக்கச் சிங்களச் சிறீயை அழித்து, அபராதம் கட்ட மறுத்துக் 'காராக்கிருகம் என்றாலும் கலங்கோம்' என்று தேசத்தின் சுதந்திரத்திற்காகச் செக்கிழுத்த தீரத்தமிழன் சிதம்பரனார் வழியிலே சிறை சென்ற மாவீரர்கள் பெயர்ப்பட்டியல், பின்வருவது. எம்மாலியன்றவரை போராட்டத்தில் கலந்துகொண்ட அனைவரது பெயர்களையும், பிரசுரிக்க முயன்றிருக்கிறோம். எனினும், தவிர்க்க முடியாத காரணங்களினால் சில வீரர்களின் பெயர்கள் விடுபட்டுப் போய்விட்டன. மன்னிக்க வேண்டு கிறோம். போதிய விபரங்களைப் பலவாறு முயன்றும் பெறக்கூடாது போய்விட்டமையால், நிகழ்ந்ததைப் பொருட் படுத்த வேண்டாமெனக் கரங்குவித்துக் கேட்கிறோம். சிங்களச் சிறீயை அழித்துச் சிறை சென்ற வீரர்களைப் பாருங்கள்! பாருங்கள்!!

**- நாவேந்தன்**

### பருத்தித்துறை - ஒரு வாரச் சிறைத்தண்டனை பெற்றோர்.

| | | |
|---|---|---|
| 1. | திரு. முத்துக்குமார ஐயர். | பருத்தித்துறை |
| 2. | திரு. வி. சந்திரநாதன். | வி.எம்.வீதி, பருத்தித்துறை |
| 3. | திரு. க. ஆறுமுகம். | செட்டித்தெரு, பருத்தித்துறை |
| 4. | திரு. எஸ். தங்கத்துரை. | ஸ்ரீகந்தவாசம், அல்வாய் வடக்கு. |
| 5. | திரு. ஏ. இரத்தினசிங்கம். | மந்திகை, பருத்தித்துறை |
| 6. | திரு. கே. கந்தசாமி. | பருத்தித்துறை |
| 7. | திரு. எம். செல்லையா. | கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. |
| 8. | திரு. கே. சுந்தரலிங்கம். | பருத்தித்துறை |
| 9. | திரு. வி. செல்வராசா. | பருத்தித்துறை |
| 10. | திரு. குலசேகரம் | பருத்தித்துறை. |
| 11. | திரு. சத்தியசீலராசா | மார்க்கட் ஒழுங்கை, பருத்தித்துறை. |
| 12. | திரு. ஆ. அருணாசலம் | நாகலிங்கமுதலியார் ஒழுங்கை, பருத்தித்துறை. |
| 13. | திரு. ரி. அமிர்தானந்தம் | மயிலியதனை, தொண்டமானாறு. |

14. திரு. ந. பாலசுந்தரம் புலோலி மேற்கு, பருத்தித்துறை.
15. திரு. வெ. கிருஷ்ணதாஸ் புலோலி மேற்கு, பருத்தித்துறை.
16. திரு. வி. சச்சிதானந்தம் ஓடக்கரை ஒழுங்கை, பருத்தித்துறை.
17. திரு. எஸ். ஜெகநாதன் புலோலி கிழக்கு, பருத்தித்துறை.
18. திரு. ந. பாலசுப்பிரமணியம் ஓடக்கரை ஒழுங்கை, பருத்தித்துறை.
19. திரு. வே. ஆள்வார்ப்பிள்ளை கட்டைவேலி, கரவெட்டி.
20. திரு. சே. கிருஷ்ணசிங்கம் ஆத்தியடி, பருத்தித்துறை.
21. திரு. வே. க. கந்தசாமி (புதுமைலோலன்) யாழ்ப்பாணம்.
22. திரு. த. திருநாவுக்கரசன் (நாவேந்தன்) மானிப்பாய்.
23. திரு. கா. வேலுப்பிள்ளை பழைய உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை.
24. திரு. வ. வேலுப்பிள்ளை சிவன்கோவிலடி, வல்வெட்டித்துறை.
25. திரு. வே. சின்னப்பு உடுத்துறை, செம்பியன்பற்று.
26. திரு. க. சதாசிவம் தட்டாதெரு, பருத்தித்துறை.
27. திரு. சி. இராசசிங்கம் துன்னாலை தெற்கு, கரவெட்டி.
28. திரு. வே. வெற்றிவேற்பிள்ளை துன்னாலை வடக்கு, துன்னாலை.
29. திரு. வ. வேலுப்பிள்ளை துன்னாலை தெற்கு, துன்னாலை.
30. திரு. செ. மணியம் துன்னாலை தெற்கு, துன்னாலை.
31. திரு. ஏ. எஸ். வேலாயுதம் அல்வாய் வடக்கு, அல்வாய்.
32. திரு. நா. செல்லையா துன்னாலை தெற்கு, கரவெட்டி.
33. திரு. ப. ப. தாமு 'தங்கமணிவாசா', கரவெட்டி.
34. திரு. பொ. துரைராசா கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
35. திரு. க. தங்கராசா துன்னாலை வடக்கு, துன்னாலை.
36. திரு. நா. சண்முகம் துன்னாலை வடக்கு, துன்னாலை.
37. திரு. சி. தங்கராசா துன்னாலை வடக்கு, துன்னாலை.
38. திரு. கோ. சுப்பிரமணியம் புலோலி மேற்கு, பருத்தித்துறை.
39. திரு. சி. முருகேசு 3ம் குறுக்குத்தெரு, புலோலி கிழக்கு,
40. திரு. செ. நவரத்தினம் புலோலி மேற்கு.
41. திரு. த. இரத்தினசபாபதி வல்வெட்டித்துறை.
42. திரு. செ. சின்னரத்தினம் வல்வெட்டித்துறை.
43. திரு. சு. நடராசசிங்கம் புலோலி மேற்கு, பருத்தித்துறை.





## சாவகச்சேரி

44. திரு. சோ. செல்வரத்தினம் மீசாலை ஸ்ரேசன், மீசாலை.

## மல்லாகம் - கோடு கலையும்வரை சிறையிருந்தோர்.

45. திரு. சு. பற்குணம் ஆசிரியர், மல்லாகம்.
46. திரு. சி. பரஞ்சோதி கொத்தியாவத்தை, சுன்னாகம்.
47. திரு. இ. முருகையா புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன்.
48. திரு. வி. தருமலிங்கம் கி.ச. தலைவர், உடுவில்.
49. திரு. அம்பிகைபாகன்.
50. திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் யாழ்ப்பாணம்.
51. திருமதி. கோமதி வன்னியசிங்கம் 47, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
52. செல்வி. மங்கையர்க்கரசி கிறிஸ்தோப்பர் யாழ்ப்பாணம்.
53. திரு. குமாரசாமி
54. திரு. கா நாகலிங்கம் அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
55. திரு. இ. கந்தையா அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
56. திரு. ச. வேலுப்பிள்ளை அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
57. திரு. ந. தம்பிராசா அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
58. திரு. க. குலசேகரம் அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

## யாழ்ப்பாணம் - இருவாரச் சிறைத் தண்டனை பெற்றோர்

59. திரு. த. தருமலிங்கம் 4ம் வட்டாரம், புங்குடுதீவு.
60. திரு. மு. மயில்வாகனம் 4ம் வட்டாரம், புங்குடுதீவு.
61. திரு. என். சோமசுந்தரம் இணுவில் மேற்கு, சுன்னாகம்.
62. திரு. கே. குமாரசாமி இணுவில் மேற்கு, சுன்னாகம்.
63. திரு. சி. சிவலிங்கம் 18, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
64. திரு. கே. சரவணமுத்து வேலணை மேற்கு, வேலணை.
65. திரு. எஸ். சின்னத்துரை ஆவரங்கால், புத்தூர்.
66. திரு. கே. எஸ். பத்மநாதன் திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.

67. திரு. த. சண்முகம் யாழ்ப்பாணம்.
68. திரு. பி. சண்முகநாதன் நாதன் ஸ்ருடியோ, யாழ்ப்பாணம்.
69. திரு. கே. பரமோதயம் சுண்டிக்குளி.
70. திரு. ஏ. இலங்கராசா கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
71. திரு. பீற்றர் சோமசுந்தரம் சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டிக்குளி.
72. திரு. எஸ். முத்துச்சாமி கச்சேரி கிழக்கு. யாழ்ப்பாணம்.
73. திரு. எஸ். சின்னராசா கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
74. திரு. இ. குமாரசாமி பெருமாள் கோயில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.
75. திரு. பொ. இராசையா கரம்பன் தெற்கு, ஊர்காவற்றுறை.
76. திரு. எஸ். சண்முகம் கல்லாரை, மல்லாகம்.
77. திரு. ஏ. சிவஞானசுந்தரம் புத்தூர் கிழக்கு, புத்தூர்.
78. திரு. க. இராசரத்தினம் திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
79. திரு. சி. இரத்தினகோபால்
80. திரு. என். அருளானந்தம் அராலி
81. திரு. கனகசுந்தரம் உரும்பிராய்.
82. திரு. பரஞ்சோதி கந்தரோடை, சுன்னாகம்.
83. திரு. கே. அமிர்தலிங்கம் மட்டுவில்.
84. திரு. மு. சின்னத்தம்பி அராலி தெற்கு, அராலி.
85. திரு. சி. கதிரவேலு நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.
86. திரு.. சி. சீவரத்தினம் சிறாம்பியடி, யாழ்ப்பாணம்.
87. திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. யாழ்ப்பாணம்.
88. திரு. ஜி. நல்லையா(செனட்டர்) பழைய பூந்தோட்ட வீதி, யாழ்ப்பாணம்.
89. திரு. பி. இமானுவல், பட்டினசபை உறுப்பினர் ஊர்காவற்றுறை.
90. திரு. யோ. டேவிட்
91. திரு. வசந்தகுலசிங்கம் ஆனைக்கோட்டை
92. திரு. பி. சிவசுப்பிரமணியம் பெரியகடை, யாழ்ப்பாணம்.
93. திரு. ஏ. பொன்னுச்சாமி நாரந்தனை வடக்கு, நாரந்தனை.
94. திரு. கே. சண்முகராசா சங்கரத்தை, வட்டுக்கோட்டை.
95. திரு. இராமநாதன் பெரியகடை, யாழ்ப்பாணம்.
96. திரு. கே. சுப்பிரமணியம் பெரியகடை, யாழ்ப்பாணம்.





97. திரு. மு. கி. கனகசபை
98. திரு. ம. திருநாவுக்கரசு மல்லாகம்.
99. திரு. நவரத்தினசிங்கம் புதிய செம்மணி வீதி, நல்லூர்.
100. திரு. சி. சிவசம்பு யாழ்ப்பாணம்.
101. திரு. சர்வானந்தராசா 'சரஸ்வதி வாசா', யாழ்ப்பாணம்.
102. திரு. ரி. கே. இராசசேகரம்.
103. திரு. ஆர். வி. வேலுப்பிள்ளை இணுவில் கிழக்கு, சுன்னாகம்.
104. திரு. எம். கே. செல்லத்துரை
105. திரு. ரி. நடராசா
106. திரு. த. சுப்பிரமணியம் ''ஸ்ரீமுருகன்'', யாழ்ப்பாணம்.
107. திரு. கு. வன்னியசிங்கம். எம்.பி. யாழ்ப்பாணம்.
108. திரு. எஸ். நடேசபிள்ளை
109. திரு. மா. பரமகுரு
110. திரு. பா. சத்தியசீலன்
111. திரு. ஏ. கனகசபை
112. திரு. செல்லத்துரை
113. திரு. செ. மதியாபரணம்
114. திரு. வி. சிவபுண்ணியம்
115. திரு. ஆர். சோமசுந்தரம்
116. திரு. வெ. செழியன் 345 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
117. திரு. எஸ். எம். முத்தையா
118. திரு. எஸ். வி. பீற்றர்பிள்ளை
119. வித்துவான் கந்தையா கொக்குவில்.

## கோடு கலையும்வரை சிறையிருந்தோர்

120. திருமதி. சமாதானம் சோமசுந்தரம், சோமசுந்தரம் ஒழுங்கை, சுண்டிக்குளி.
121. திருமதி. ப. கிங்ஸ்பெரி, நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.
122. திருமதி. நல்லையா, பழைய பூந்தோட்டவீதி, யாழ்ப்பாணம்.
123. திருமதி. இராசபூபதி அருணாசலம், சாவகச்சேரி.
124. திருமதி. வைத்திலிங்கம்
125. திருமதி. ரி. பூபதி

(கிழக்கு மாகாணத்து அன்பர்களின் பெயர்கள் இதில் இடம்பெறவில்லை)

## 'சிறீ அளித்த சிறை' பற்றி......

தேர்தல் காலத்தில் நாவேந்தன் எழுதியிருந்த 'சிறீ அளித்த சிறை' என்ற புத்தகம் தமிழரசுத் தலைவர்களி னதும், தொண்டர்களினதும் மனவுறுதியை மக்களிடம் படம் பிடித்துக் காட்டியது. எதற்கும் தயாரான தமிழரசு வாதிகளிடம் நம்பிக்கை வைக்கலாம் என்ற எண்ணத்தை அப்புத்தகம் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. அவரது சீரிய ஆற்றோட்டம் போன்ற எழுத்துநடை அவரது குடும்பச் சொத்தாகும். இவரது எழுத்தை விரும்பிய மக்கள் கூட்டம் இவரது விறுவிறுப்பான உரையைக் கேட்கவும் விழைந்து நின்றது.

**ரொறன்ரோ, எஸ். கே. மகேந்திரன், எம். ஏ**
**கனடா (சட்டத்தரணி)**

## பேராயரின் கருத்து

'நாவேந்தன்' சாதாரண தமிழ் ஆசிரியராக இருந்து விடவில்லை. எழுத்து, நாடகம், திருச்சபை, அரசியல் என்பவற்றிலெல்லாம் முழுமூச்சாக ஈடுபட்டார். தமிழரசுக் கட்சிமீதும் தந்தை செல்வா மீதும் அவருக்கு அதிக பற்றுதல் இருந்தது. 1956 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது தமிழரசுக் கட்சியின் மேடைகளில் கொஞ்சு தமிழிலும் குமுறும் நடையிலும் கட்சிக் கொள்கைகளை அள்ளி வீசினார். 1958ஆம் ஆண்டு தந்தை செல்வா சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்த போது அப்போராட்டத்தில் ஊக்கமாக ஈடுபட்டு ஒருவாரம் சிறைவாசம் அனுபவித்தார். சிறையில் இருந்து திரும்பிய பின் 'சிறீ அளித்த சிறை' என்றவொரு நூலையும் எழுதி வெளியிட்டார். இதில் சிறையில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை அழகுபட விபரித்துள்ளார்.

**- பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்.**
**வட்டுக்கோட்டை.**

## "தமிழ்த் தேசியத்தைத் தட்டியெழுப்பிய பேச்சும் எழுத்தும் இவனுடைத்தே!"

அமரர் நாவேந்தன் அவர்கள், நான் பள்ளிச் சிறுவனாகத் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் பயின்ற காலத்திலேயே சிறந்த தமிழ்ப் பற்றாளராகவும், தமிழ் உணர்ச்சியும், தியாக உணர்வும் நிறைந்த அரசியலாளராகவும், உயிர்த்துடிப்புள்ள தமிழ்ப் பேச்சாளராகவும் விளங்கித் தமிழ்த் தொண்டாற்றியவர். தமிழ் மொழியின் மீதுள்ள ஆழ்ந்த, ஆராத பற்றின் காரணமாகச் செந்தமிழ் நடையையும், மரபுவழித் தமிழ்ப் பாரம்பரியத்தையும் இடையறாது போற்றியவர். ஆயினும் பாரதியின் கவித்திறனாலும், பாடற் பொருள் திறனாலும் கவரப்பட்டு, தமிழில் புதுமைக்கும் இடமுண்டு என்று சிந்தித்தவர்.

பேச்சாற்றலில் தமிழகத்துத் தலைசிறந்த பேச்சாளர் வரிசையில் வந்த ரா. பி. சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், அண்ணாதுரை போன்றோரின் வழியில் இலங்கையில் பழந் தமிழ் இலக்கியத்தை அழகு தமிழில் எளிமையாகப் பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் ஆற்றொழுக்காகப் பேசும் பாணியில் ஒரு முன்னோடியாக விளங்கியவர். தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அதன் இளைஞர் அணி முக்கியத்தராகக் கட்சிக் கொள்கைகளைப் பரப்பித் தமிழ் உணர்வும், தமிழ்த் தேசிய வாதமும் வடகிழக்குப் பகுதிகளில் பட்டிதொட்டிகளிலெல்லாம் பரவும் வகை செய்தார்.

தமிழரசுக் கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையான 'சுதந்திரன்' இவரது வீராவேச எழுத்து வேகத்துக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. அரசியல் அரங்கு, கதை, கட்டுரை, இலக்கிய விமர்சனம், கவிதை, நாடகம் என்று சுதந்திரன் பத்திரிகையில் ஆஸ்தான எழுத்தாளராக பல புனைபெயர்களில் பொருள் மிகுந்த கருத்துக்களை அள்ளித் தெளித்தவர். இவர் நடத்திய 'சங்கப்பலகை' என்ற பத்திரிகையில் 'நக்கீரன்' என்ற பெயரில் நாவேந்தன் எழுதிக் குவித்தவை, எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் முன்வைத்த வாதங்களையெல்லாம் தவிடுபொடியாக்கும் தர்க்க முறையான வாதத்திறன் கொண்டவையாக அமைந்திருந்தன. அரசியல் எதிராளிகள் நாவேந்தன் மீது கொண்டிருந்த அச்சமும் நியாயமானதே.

எனது மாமனார் திரு. இரா. மு. நாகலிங்கம் அவர்கள் கண்டியில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக வெளியிட்ட 'செய்தி' வார இதழில் வெளியான முக்கிய அரசியல் கட்டுரைகள் இவர்கள் வீட்டிலிருந்தே அனுப்பப்பட்டவை என்பது நான் நேரடியாகக் கண்ட உண்மை. தாம் கடைப்பிடித்த அதே நேர்வழியில் தமது குடும்ப உறுப்பினர்களையும் ஈடுபடச்செய்து சிறந்த தமிழ் அபிமானிகளாக அவர்களை வளர்த்தெடுத்தவர் திரு. நாவேந்தன் அவர்கள்.

மொத்தத்தில் தமிழ்த் தேசியவாதம் இன்று முழுமையாக வளர்ச்சியுற்று, அகில உலகக் கவனத்தை ஈர்த்ததுடன், தென்னாசியாவில் ஒரு உறுதியான, கருத்திற்கொள்ள வேண்டிய சக்தியாக வளர்ந்துள்ளதென்றால், அதில் நாவேந்தனுக்கும் ஒரு முக்கிய இடம் உண்டு.

அன்னாரின் இழப்பு இலங்கைத் தமிழருக்கும், தமிழ் கூறும் நல்லுலகுக்கும் மட்டுமன்றித் தமிழும், தமிழரும், அவர்தம் பண்பாடும் செழித்து வாழ வேண்டும், அவர்தம் பண்பாட்டு அடையாளங்கள் சிதைவுறாது உன்னதமாகப் பேணப்படல் வேண்டும் என்றும் சிந்திக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் ஒரு மாபெரும் இழப்பே என்பதில் ஐயம் எதுவுமில்லை.

**பேராசிரியர் சோ. சந்திரசேகரன்.**
**கல்விப்பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.**
**கொழும்பு - 3**

## விரைவில் வெளிவருகின்றன!

நாவேந்தன் எழுதியவை

- ✣ நாவேந்தன் சிறுகதைகள்
- ✣ நாவேந்தன் கட்டுரைகள்
- ✣ நாவேந்தன் கவிதைகள்
- ✣ மண்டோதரி (நாடகம்)
- ✣ மரியாள் மக்தலேனா (காவியம்)

# எழுத்துலகில் நாவேந்தன்

## எழுதிய நூல்கள்

1. நான் ஒரு பிச்சைக்காரன்
2. தலைவர் வன்னியசிங்கம்
3. சிறீ அளித்த சிறை
4. வாழ்வு (சிறுகதைத் தொகுதி)
5. தெய்வ மகன் (சிறுகதைத் தொகுதி)
6. சிலப்பதிகாரச் செந்நெறி
7. மானவீரன் கும்பகருணன்
8. மாவட்ட அபிவிருத்திச் சபைகளைப் பகீஸ்கரிப்பது ஏன்?
9. மரியாள் மகதலேனா (காவியம்)
10. ஜோன் ஸ்கடர் நாடகம்
11. ஜோன் ஸ்கடர் வரலாறு
12. பெருநெருப்பு

## எழுதிய பத்திரிகைகள் (ஈழத்தில்)

1. இந்து சாதனம்
2. ஈழகேசரி
3. சுதந்திரன்
4. வீரகேசரி
5. தினகரன்
6. ஈழநாடு
7. தினபதி
8. சிந்தாமணி
9. ஈழமுரசு
10. முரசொலி
11. உதயன்
12. செய்தி
13. நவஜீவன்
14. புதுயுகம்
15. உதயதாரகை
16. தினக்குரல்
17. தமிழன்
18. தமிழரசு

## (தமிழகத்தில்)

1. தென்றல் (ஆசிரியர் : கவிஞர் கண்ணதாசன்)
2. தென்றல் திரை (ஆசிரியர் : கவிஞர் கண்ணதாசன்)
3. அறப்போர் (ஆசிரியர் : இராம. அரங்கண்ணல்)
4. சாட்டை (ஆசிரியர் : கலைஞர் ஏ. பி. நாகராசன்)
5. உமா (ஆசிரியர் : ஜி. உமாபதி)
6. கலைமன்றம்
7. மணிமொழி
8. தமிழ் சினிமா

சஞ்சிகைகள்

1. சமூகத் தொண்டன்
2. கலைச்செல்வி
3. உதயம்
4. விவேகி

பத்திரிகை ஆசிரியராக:

1. தமிழ்க் குரல்
2. சங்கப் பலகை
3. நாவேந்தன்
4. நம்நாடு (தினசரி)



எழுத்தாளன் என்ற நிலையில் பேணப்பட வேண்டிய பல எழுத்துக்களை நாவேந்தன் விட்டுச்-சென்றுள்ளார். அவற்றைப் பேணி வருங்காலச் சமுதாயத்திற்குக் கையளிப்பது அவரது அன்புக்குரித்தானவர்கள் கடமை ஆகும். நாவேந்தன் நினைவு நீடிக்கட்டும்.

- பேராசிரியர் கா. சிவத்தம்பி

நாவேந்தனின் படைப்புக்கள் அனைத்தும் நூலுருப்பெற வேண்டும். இன்றைய இளம் சந்ததியினர் அவற்றை அறியும் வாய்ப்பினைப் பெறவேண்டும். இதுவே என் விருப்பமாகும்.

- ஆர். சிவகுருநாதன்
(சட்டத்தரணி, முன்னாள் பிரதம ஆசிரியர்-தினகரன்)

அரசியல் மேடைகளில் நாவேந்தனின் காரசாரமான பேச்சுக்கள் பார்வையாளர் களை வெகுவாகக் கவர்ந்தன. அவரது பேச்சைக் கேட்பதற்காக மக்கள் திரளாகக் காத்திருந்தனர். இலக்கிய உதாரணங்களை யும் கவிதைகளையும் லாவகமாக தன் கருத்துக்களை நிறுவ, மேற்கோள் ஆதாரங்களைக் காட்டுவதில் வல்லவராக இருந்தார் நாவேந்தன்.

- செ. யோகநாதன்
(எழுத்தாளர்)

நாவேந்தன் அவர்கள் எழுத்துலகில் மிளிரும் ஒரு வைரமணி. ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களின் வரிசையில் நாவேந்தன் சிறந்தவர் என்பதற்கு அவரது கதைக் கொத்துக்களே சான்று பகரும்.

- பண்டிதர் க. சச்சிதானந்தன்